# ஆத்மஜோதி

10-

ஆடி, ஆவணி, புரட்டாதி 1990



குருகுல பிதா, மாதா

கௌரவ ஆசிரியர்: "ஆத்மஜோதி" நா. முத்தையா




உ

சிவமயம்

# ஆத்மஜோதி

ஓர் ஆத்மீக மாத வெளியீடு




எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே.

— சுத்தானந்தர்.


ஜோதி: 36 பிரமோதூத ஹூ ஆடி மீ 1-உ (17-7-90) சுடர் 4

**ஆத்மஜோதி**
பதிப்பகம்,
குருகுலம், கிளிநொச்சி.

பதிப்பாசிரியர் :
க. துரைராசா

நிர்வாகி :
வா. கலாதரன்

கணக்காளர் :
வ. பரமேஸ்வரி

பதிப்பு மேற்பார்வை :
கே. சுவாமிநாதன்

பதிப்பு உதவியாளர் :
எம். வி. இராஜேந்திரம்


**அட்டைப் படம்**

கிளிநொச்சிக் குருகுலத்தின் ஆரம்ப கால நிர்வாகியாயிருந்து அதனை வளர்த்த பெரியார் அப்புஜி (வே. கதிரவேலு), அம்மா அவர்களது சிரார்த்த தினம் ஐப்பசி மீ 7-ந் உ (24-10-90) அமைகின்றது. 139-ம் பக்கம் பார்க்க.

## இந்த இதழில் ... ... ...


நல்லூரான் திருவடி ... 109
நல்லூரின் பெருமை ... 110
நல்லைநகர்த் திருப்புகழ் — 114
நல்லூர்க் கந்தனுக்கு — — 115
ஓதாமல் ஒருநாளும் — — 118
கலிகாலம் — 122
சேரிடம் அறிந்து சேர் — 125
புண்ணியதானம் — 127
வினையும் வியாதியும் — 128
முருகனைக் காணும் முறை ... 129
ஒருவரையும் பொல்லாங்கு — ... 130
வடிவேல் — 132
இரும்பும் கரும்பும் — 135
பூஜை — 138
தியாகச் சுடர் — 139

பாலர் பகுதி
லோபி — 141
பிரபு — 144
குரங்குத் தாயன்பு — 145

வேதாந்த விளக்கின் — — 148
சக்தி வணக்கம் ... 151
தேவியின் திருநாம அர்ச்சனை ... 153
நினைவுகள் — 155


**மன்னிக்கவும் :** மின்சாரத் தடை காரணமாகவும் கடதாசித் தட்டுப்பாடு காரணமாகவும் சுடர்களை ஒழுங்காக வெளியிட முடியவில்லை. நிலைமை சீரானதும் சுடர்கள் மாதாந்தம் ஒழுங்காக வெளிவரும்.

உ

சிவமயம்

# நல்லூரான் திருவடி

( யோகர் சுவாமிகள் )

நல்லூரரான் திருவடியை
நான் நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனெடி – கிளியே
இரவு பகல் காணேனெடி !

ஆன்மா அழியாதென்று
அன்றெனக்குச் சொன்னமொழி
நான் மறந்து போவேனோடி - கிளியே
நல்லூரான் தஞ்சமெடி !

தேவர் சிறைமீட்ட
செல்வன் திருவடிகள்
காவல் எனக்காமெடி – கிளியே
கவலை யெல்லாம் போகுமெடி !

எத்தொழிலைச் செய்தாலென்
ஏதவத்தைப் பட்டாலென்
கர்த்தன் திருவடிகள் - கிளியே
காவல் அறிந்திடெடி !

பஞ்சம் படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி - கிளியே
ஆறுமுகம் தஞ்சமெடி !

சுவாமி யோக நாதன்
சொன்ன திருப் பாட்டைந்தும்
பூமியிற் சொன்னனெடி - கிளியே
பொல்லாங்கு தீருமெடி !

# நல்லூரின் பெருமை

( ஆசிரியர் )

நல்லூர் நல்ல ஊர். யாழ்ப்பாணத்து நல்லூர், தமிழ் நாட்டு திருவெண்ணெய் நல்லூர், ஆதித்த நல்லூர் போன்ற அரும்பெருஞ் சிறப்பு வாய்ந்த பழைய நகர். நல்லூரைத் தலைநகராகக் கொண்டு ஆரிய சக்கரவர்த்திகள் அகன்ற பெருநிலப் பரப்பை அரசு செய்தபோது தமிழ்நாட்டு இராமேஸ்வரத்தையும் பரிபாலித்து சேதுகாவலர் என்னும் சிறப்புப் பட்டமும் பெற்றிருந்தார்கள்.

தமிழ்த் தெய்வமாம் முருகனுக்குத் தமிழ் மக்கள் வதியும் இடமெல்லாம் கோவில்கள் எழுப்பப்பட்டுள்ளன. முருகனுக்கும் தமிழருக்குமிடையில் உள்ள தொடர்பு வரலாற்றுக்கும் அப்பாற்பட்டதெனலாம். நமது நாடாகிய இலங்கையில் கருணைக் கடலாகிய முருகன் கதிர்காமத்திலும், நல்லூர், செல்லச் சந்நிதி, கந்தவனக் கடவை, மண்டூர், சித்தாண்டி, வெருகல், மாவிட்டபுரம் முதலிய புண்ணிய தலங்களிலும் கோவில் கொண்டிருக்கின்றான்.

செந்தமிழும் சைவ நெறியும் தலையெடுத்த நல்லூரின் பழைய அரசிருக்கைக்கு அருகிலமர்ந்த நல்லூர்க் கந்தனாலயத்தைச் சூழ நாற்றிசையிலும் காவற் கோவில்கள் அமைந்திருந்தன. கிழக்கில் வெயிலுகந்த பிள்ளையார் கோவில், தெற்கில் கைலாசநாத சிவன் கோவில், மேற்கில் வீரமாகாளி அம்மன் கோவில், வடக்கில் சட்டநாத சிவன் கோவில் அமைந்திருந்தன. அரசர்கள் நந்திக் கொடியும் நந்தி முத்திரையும் கொண்டவர்களாய்ப் பரிபாலனம் செய்தனர்.

கல்வளை அந்தாதி பாடிய சின்னத்தம்பிப் புலவர், அவரது தந்தையாராகிய வில்லவராய முதலியார், ஆறுமுக நாவலர் போன்ற அறிஞர் பெருமக்களும் நல்லூரின் பெருமைக்குக் காரணராயிருந்தனர்.

இத்தகைய புகழ்பூத்த நல்லூரின் அருமை பெருமைகள் யாவற்றையும் பதினேழாம் நூற்றாண்டின் இடைக் காலத்தில் போர்த்துக்கேயர் என்னும் பறங்கியர் பாழ்படுத்தித் தரைமட்டமாக்கி விட்டனர். பின்னர் ஒல்லாந்தர் என்னும் உலாந்தாக்கள் அரசாட்சி செய்த காலத்தில் சைவ மறுமலர்ச்சி விடிவெள்ளிபோல் மெதுவாக ஒளி வீசியது. புலவர்கள் பலர் பக்திப் பிரபந்தங்கள் பாடுந் தகைமையுடையவர்களாய்த் தலை எடுத்தார்கள்.

பண்டைய நல்லூர்க் கந்தசுவாமி கோவிலை பறங்கியர் பாழ்படுத்தி, அத்திபாரத்தையும் கிளறிவிட்டபின் மறுமலர்ச்சிக் காலத்திலே 1734ஆம் ஆண்டளவில் ஒல்லாந்தர் ஆட்சியின் போது, யாழ்ப்பாணக் கச்சேரியில் உயர்ந்த உத்தியோகம் வகித்த ஸ்ரீமத் இரகுநாத மாப்பாண முதலியார் என்னும் பெரியார், அதிகாரிகளிடம் உத்தரவு பெற்று ஒரு வேற்கோட்டம் அமைத்து, வேல்வைத்து வழிபடுவதற்கான முறையை ஆரம்பித்தார். மக்கள் வழிபட்டுய்யும் வகையில் சிவத்திரு சுப்பையாக் குருக்கள் என்னும் செம்மனச் செல்வர் பரார்த்த பூசையை முட்டின்றிச் செய்து வந்தார். நல்லூருக்குக் கிழக்கில் இருந்த மடத்தில் சிவத்திரு கங்காதரக் குருக்கள் கந்தபுராண படனஞ் செய்து பக்தி நெறியைத் தூய்மைப் படுத்தி வந்தார்.

ஈழத்துச் சித்தர் பரம்பரையில் முன்னோடியாகவும் முதல்வராகவும் திகழ்ந்த மூத்தியானந்தர் என்ற பெயரையுடைய கடையிற் சுவாமிகளுடைய நடமாட்டம் ஏற்பட்ட பின் நல்லூரில் ஒரு தெய்வீக அலை வீசத் தொடங்கியது. நாள்தோறும் வளர்ந்து வந்த நல்லூரின் சிறப்பு, வனப்பு புகழ் பெற்றனவாயின. கிழக்குப் புறத்தில் அமைந்த தேரடிக்குத் தனிச் சிறப்பு உண்டாயது. அங்கே காவல் தெய்வமாய வைரவக் கடவுளின் ஆனந்த கோலாகல அருள் வீச்சும், அதனால் கவரப்பெற்ற அடியார் கூட்டமும் கருங்கல் மனத்தையும் கரையப் பண்ணின. கற்பூர வரிசையும் காவடிகள் வரிசையும், கந்தன் மீது பக்திப் பாடகர் வரிசையும் தேரடியைத் தெய்வலோகம் ஆக்கின.

" ஒரு பொல்லாப்பு மில்லை.
நாமறியோம், ஆரறிவார்?
எப்பவோ முடிந்த காரியம்.
முழுதும் உண்மை.''

என்ற மகா வாக்கியங்களை யோகர் சுவாமிகளுக்கு உபதேசம் செய்து ஆட்கொண்ட செல்லப்பா சுவாமிகள் தேரடியில் இருக்கத் தொடங்கிய பின் அந்த இடத்தில் ஒரு ஆத்மீக அலை வீசத் தொடங்கியது.

செல்லப்பர் தேரடியிற் குந்தியிருந்து சிந்திக்கத் தொடங்கிய காலத்திலேயே அடியார்கள் பலர் அவரிடம் ஏதோ அற்புத சக்தி உண்டென்று அனுமானித்து, அவரைச் சூழ்ந்து மொய்க்கத் தொடங்கினர்கள். அதே வேளையில் அவர் தமக்குள்ளே சிந்தனைப் பேச்சுக்களை முணு முணுக்கக் கண்ட சிறுவர்கள், 'விசரன்' என்று கூறிக் கல் எறியவுந் தொடங்கினர்.

பகல் முழுதும் விசர்க் கோலம் கொண்டிருக்கும் செல்லப்பா சுவாமிகள், இரவில் அர்த்த சாமப் பூசை நிறைவுற்று எல்லோரும் அகன்ற பின், மெதுவாக இருக்கை விட்டெழுந்து கோபுர வாசற் பக்கம் சென்று, முருகனைத் தேடுவார் போல், "பிதாவே! பிதாவே!!" என்று கூவி அழைத்து, அவருடன் சொல்லெதிர் பெற்றும் பெறுமலும் உரையாடி வந்தார்.

அவரின் உள்ளத்தில் முத்துப் போன்ற சிந்தனை வாக்கியங்கள் உருண்டு திரண்டு வெளிவரக் காத்திருந்தன. 'பக்குவமுள்ள சீடன் ஒருவன் வருவான்; அவன் காதில் இந்த மகா வாக்கியங்களை வார்த்து விடலாம்; அவன் மூலம் இவ் வாக்கியங்கள் சுருதியென எல்லோருக்கும் கேட்கும்; எங்கும் கேட்கும்.' எனக் கருதினர். அம்மகா வாக்கியங்களை முன்பு பார்த்தோம்.

**உபதேசம்**

சீதம், உஷ்ணம், சுகம், துக்கம் முதலியன புலன்களின் உணர்ச்சிகளால் உண்டாகின்றன. அவை அநித்தியம்; ஓயாமல் வருவதும் போவதுமாக இருப்பவை. அவைகளை நீ பொறுத்துக் கொள். — பகவத் கீதை.

செல்லப்பர் நல்லூர்த் தேரடியிலேயே வாழ்ந்தவர். தவத்திரு யோகர் சுவாமிகள் நல்லூரிலேயே அரிய தவங் கிடந்து ஞானதீட்சை பெற்றவர். அவர் அருளிச் செய்த நற் சிந்தனைப் பாடல்களில் எல்லாம் நல்லூர்க் கந்தனின் கடாட்சம் தொனிக்கிறது. உலகம் உய்ய உதித்த இந்த ஞான பரம்பரையினர் மூலம் நல்லூர்க் கந்தன் அருள் மழை பொழிந்து வருகின்றான்.

ஒரு காலத்தில் நல்லூர்க் கோவில் நிர்வாகம் இப்போ திருப்பது போல் சிறப்பாயில்லாதபோது, "செல்லப்பா சுவாமிகள் தெய்வ வாக்காக, 'ஒரு வெள்ளைக்காரன் வருவான், அதன் பின்னர் கோயில் கருமங்கள் செவ்வனே நடை பெறும் என்று சொன்னார்.'' என அவருடைய சீடர்களுள் ஒருவரான கொழும்புத்துறை விதானையார், காலஞ்சென்ற திரு. திருஞானசம்பந்தர் வாயிலாகக் கேட்டிருக்கிறோம்.

நல்லூர் மேலை வீதியில் நல்லூருக்கு மேலும் பெருமை தேடிக் கொடுத்துக் கொண்டிருப்பது நல்லை திருஞான சம் பந்தர் ஆதீனம் என்றால் அது மிகைப்படுத்திக் கூறுவது ஒன்றல்ல. இந்தியாவிலுள்ள ஆதீனங்கள் எல்லாமே பல பெரிய கோவில்களைப் பரிபால னம் செய்யும் பாக்கியத்தைப் பெற்றுள்ளன. அதே போன்று கந்தப் பெருமான் திருவருளால் இந்த நல்லை ஆதீனமும் வளர்ந்து, இலங்கை முழுவதற் குமே சைவத் தலைமைப் பீட மாக அமைந்து, பணியாற்ற வேண்டுமெனப் பிரார்த்திப் போமாக.

**உபதேசம்**

எனது இலக்ஷியத்தை ஒரு சில சொற்களில் வெளிப படுத்தி விடக்கூடும். மனி தர்கட்கு அவர்களது தெய் வத் தன்மையைப் போதித் தலும், அதனை வாழ்க்கை யில் நேரும் ஒவ்வோர் இயக்கத்திலும் வெளிப் படச் செய்யும் வகையைப் போதித்தலுமே.

— சுவாமி விவேகானந்தர்.

# நல்லைநகர்த் திருப்புகழ்

( அருணகிரிநாதர் )

தாத்தா தான தத்தன தனதன
தாத்தா தான தத்தன தனதன
தாத்தா தான தத்தன தனதன தனதான

பூத்தார் சூடுங் கொத்தலர் குழலியர்
பார்த்தால் வேலுங் கட்கமு மதன்விடு
போர்க்கார் நீடுங் கட்சர மொடுநமன் விடுதூதும்

போற்ருய் நாளுங் கைப்பொரு ளுடையவர்
மேற்ரு ளார்தம் பற்றிடு ப்ரமையது
பூட்டா மாயங் கற்றமை லிழியினார் அமுதூறல்

வாய்த்தார் பேதஞ் செப்புபொய் விரகியர்
நோற்றே நூலின் சிற்றிடை யிடைபட
வாட்டாய் வீசுங் கர்ப்புர ம்ருகமதம் அகிலாரும்

மாப்பூ ணுரங் கச்சணி முலையினர்
வேப்பூ ணுகங் கெட்டன னுனதுமெய்
வாக்கால் ஞானம் பெற்றினி வழிபட அருளாயோ

ஆத்தாள் மால்தங் கைச்சிக னிகையுமை
கூத்தா பானந் தச்சிவை திரிபுரை
யாட்பேய் பூதஞ்சுற்றிய பயிரவி புவனேசை

ஆக்கா யாவும் பற்றியெ திரிபுற
நோக்கா ஏதுஞ் செற்றவன் திருவிளை
யாட்டா லீசன் பக்கம துறையவன் பெறுசேயே

ஏத்தா நாளுந் தர்ப்பண செபமொடு
நீத்தார் ஞானம் பற்றிய குருபர
யாப்பா ராயுஞ் சொற்றமி ழருள்தரு முருகோனே

ஏற்போர் தாம்வந் திச்சையின் மகிழ்வொடு
வாய்ப்பாய் வீசும் பொற்ப்ரபை நெடுமதின்
யாழ்ப்பா ணயன் பட்டின மருவிய பெருமாளே.

# நல்லூர்க் கந்தனுக்கு நல்லதோர் அர்ச்சனை

அப்புனத்திற் சண்முகனுர் அண்ணு எனவழைக்க
ஒப்புடனே சென்றங் குருக்காட்டித் – துப்புறழ்வாய்
வள்ளிமணம் பூணவைத்த வாரணனே நாயடியேன்
உள்ளமிசை நின்ருன் உதவு.

1. ஆனைமுதற் கிளையவனே போற்றி போற்றி
அம்பலவா ணன்மகனே போற்றி போற்றி
வானவர்கள் அறியாத மணியே போற்றி
மருவுமடி யார்க் குதவும் மருந்தே போற்றி
தேனமுதத் தமிழ்தந்த செல்வா போற்றி
தெய்வகுஞ் சரிவள்ளி கணவா போற்றி
ஞானமறை தந்தருளும் நாதா போற்றி
நல்லூரிற் கந்தப்பா போற்றி போற்றி.

2. சீரான படையாறில் திகழ்வாய் போற்றி
சிவகுருவாய் உபதேசம் செய்தாய் போற்றி
பேரான சிவசோதிப் பிழம்பே போற்றி
பேணுபுவி யத்தனைக்கும் பெரியோய் போற்றி
சூரான வேல்பிடித்த குமரா போற்றி
கொக்கரிக்கும் செஞ்சேவற் கொடியாய் போற்றி
நாரா யணன்மகிழும் மருகா போற்றி
நல்லூரிற் கந்தப்பா போற்றி போற்றி.

3. பலகலையின் வடிவான பரமா போற்றி
பழநிமலை வீற்றிருக்கும் பாலா போற்றி
கலசமுனிக் கருள்சுரந்த கனியே போற்றி
கற்கிமுகி தனைமடித்த களிறே போற்றி
திலகநுதற் பார்வதியாள் சேயே போற்றி
தேம்பியநக் கீரன்நோய் தீர்த்தாய் போற்றி
நலமான நமசிவயப் பொருளே போற்றி
நல்லூரிற் கந்தப்பா போற்றி போற்றி.

4. பண்ணிசையும் பைந்தமிழு மானாய் போற்றி
பரவுமடி யார்சுவைக்கும் பழமே போற்றி
எண்ணாகி எழுத்தாகி நின்றாய் போற்றி
இருநிலநீர் தீவளவா னானாய் போற்றி
கண்ணுதலான் தந்தமுதற் கடவுள் போற்றி
கானமயில் ஏறிவரும் கதிரே போற்றி
நண்ணுகிற பரயோக நடனா போற்றி
நல்லூரிற் கந்தப்பா போற்றி போற்றி.

5. தீதுமலி சூரர்குலம் செறுத்தாய் போற்றி
தினைப்புனத்தில் மான்தேடிச் சென்றாய் போற்றி
சீதமிகு தேன்தினைமா தின்றாய் போற்றி
திகழ்வேங்கை மரமான செல்வா போற்றி
ஓதுபெயர் முட்டையென உரைத்தாய் போற்றி
ஓம்பொருளைக் கேட்டவனை உதைத்தாய் போற்றி
நாதமொடு விந்தான நலமே போற்றி
நல்லூரிற் கந்தப்பா போற்றி போற்றி.

6. தீயவினை தீர்த்தருளும்
தந்தாய் போற்றி
திரைநரைமூ தாட்டிகவி
கேட்டாய் போற்றி
தூயபரம் பொருளான
சுடரே போற்றி
தோன்றுமுடி வில்லாத
சோதீ போற்றி
நேயமுணர் நெஞ்சினிக்கும்
விமலா போற்றி
நீலமயி லேறிவரும் நீபா
போற்றி
நாயகமாய் நலமருளும்
நலமே போற்றி
நல்லூரிற் கந்தப்பா
போற்றி போற்றி.

**பொன்மொழிகள்**

நாம் ஒருவருக்கொருவர் உதவி புரிந்துகொள்ள வேண்டும், ஆனால், இன்னும் ஓரெட்டு முன் செல்லவேண்டும். முதலாவதாக, உதவி செய்யும் போது தன்னல மற்றவராக வேண்டும். "நான் செய்யச் சொல்வதை மட்டும் நீ செய்வையாயின், யான் உனக்கு உதவி செய்வேன். இல்லையேல் செய்யேன்" என்பார். இது உதவியாகுமா?

— சுவாமி விவேகானந்தர்.

7\. பவவினையைப் பற்றறுக்கும் பதியே போற்றி
பக்தியெனும் வலையிலகப் படுவாய் போற்றி
கவலையெலாந் தீர்த்தருளும் கந்தா போற்றி
கார்த்திகையார் பாலூட்டும் சிறுவா போற்றி
தவமுடையோர் கண்டுவக்கும் தருவே போற்றி
தலையெழுத்தை அழித்தெழுதும் தலைவா போற்றி
நலமான தேரேறும் நாதா போற்றி
நல்லூரிற் கந்தப்பா போற்றி போற்றி.

8\. வேதமுடன் ஆகமமும் விரித்தாய் போற்றி
வேடுவனாய் வடிவெடுத்த வேலா போற்றி
போதமொடு வீடருளும் புனிதா போற்றி
பொருளுடன் அறியாத பொருளே போற்றி
ஆதரவு தந்தருளும் அழகா போற்றி
அருணகிரி தமிழ்கேட்கும் அதிபா போற்றி
நாதஉப தேசகுரு நாதா போற்றி
நல்லூரிற் கந்தப்பா போற்றி போற்றி.

9\. செந்தா மரைத்தேவி மருகா போற்றி
சீரான திருஅருளும் செல்வா போற்றி
அந்தாதி யில்லாத அப்பா போற்றி
அருவொடுரு அருவுருவு மானாய் போற்றி
சிந்தாகுலந் தீர்க்கும் தேனே போற்றி
தேவர்தமைச் சிறைமீட்ட தேவா போற்றி
நந்தூரும் செந்தூரில் நாதா போற்றி
நல்லூரிற் கந்தப்பா போற்றி போற்றி.

10\. பூவாகக் கமழ்கின்ற பூவே போற்றி
புவியாக ஒளிர்கின்ற புவியே போற்றி
காவாகப் பயனுதவுங் காவே போற்றி
கதிராகச் செழுமைதரும் கதிரே போற்றி
ஆவாகப் பால்பொழியும் ஆவே போற்றி
அரனாகக் கதிகாட்டும் அரனே போற்றி
நாவாகப் பாடுகின்ற நாவே போற்றி
நல்லூரிற் கந்தப்பா போற்றி போற்றி.

— அளவையூர் சஞ்சீவி

## * ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்

என்று பெயர். மனதிலே படிதல், படித்தல். வேதம் ஓதுதல்; திருமுறை பாராயணம் செய்தல். கதைப் புத்தகங்கள் வாசிப்பதை ஓதுதல் என்று சொல்வதில்லை. உயிர்க்கு நன்மை பயக்கும் சமய நூல்களை, அதாவது, மந்திரங்களைப் படித்தலை ஓதுதல் என்று சொல்வது மரபு.

இலௌகீக நூல்களைப் படியாமல் விடுவதால் எதுவும் கெட்டுப் போவதில்லை. ஆனால், மந்திரங்களை ஓதாமல் ஒரு நாளைக்கு விட்டுவிட்டாலும் அதனால் பெருங்கேடு உண்டு. செப்புப் பாத்திரத்தை ஒரு நாளைக்கு விளக்கா விட்டாலும் களிம்பு படிந்துவிடும். அப் பாத்திரத்தில் நீர் குடிக்க முடியாது. அது போல ஒரு நாளைக்கு மந்திரம் ஓதா விட்டாலும், அதாவது, மந்திர ஜெபம் செய்து கடவுள் வழிபாடு ஆற்றித் தியானம் செய்யா விட்டாலும், அகங்காரமாகிய களிம்பு உள்ளத்திலே வளர்ந்து விடும். நாம் தினமும் ஓதும் மந்திரங்களினாலே தான் மனதிலே உள்ள அகங்காரம் அணு அணுவாகக் குறைந்து கொண்டு வருகிறது. ஒரு நாளைக்குச் சாப்பிடா விட்டால் அதனால் உடலுக்கு எவ்வித கெடுதியும் நேராது. ஒரு நேர உணவை இல்லாமல் செய்தால் உடலுக்கு நன்மையே தான் விளையும். ஆனால், ஒரு நாளைக்கு மந்திரம் ஓதா விட்டால் உயிருக்குப் பெருங்கேடு உண்டாகும். அன்றைய தினம் கடவுளோடு சம்பந்தம் இல்லாத தினமாகவும் ஆகிவிடும்.

கடவுள் புகழைப் பேசும் நாளே நாம் பிறந்து பயனடைந்த நாளாகும். அதுவே எமது வாழ் நாளாகக் கொள்ளப் படும். இறைவன் புகழ் ஓதாத நாள் எல்லாம் பிறவாத நாளாகக் கணிக்கப்படும். ''பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே.'' என்றார் ஒரு பெரியார்.

ஒரு ஊரிலே ஒரு தாத்தா. அவருக்கு வயது எழுபத்தைந்து. எந்த நேரமும் மகிழ்ச்சியுடன் சுறுசுறுப்பாகக்

---

* ''உலக நீதி'' தொடர் கட்டுரைகளில் முதலாவது கட்டுரை.

காணப்படுவார். ''தாத்தா! தாத்தா!! உங்களுக்கு இப்போ எத்தனை வயது?'' என்று குழந்தைகள் யாராவது கேட்டால் ''எனக்கு அவ்வளவு அதிகமில்லை. இப்போதுதான் பதினைந்து வயதாகிறது.'' என்று சிரித்துக் கொண்டே பதில் கூறுவார். ''ஏன் அப்படிக் கூறுகிறீர்கள்?'' என்று யாராவது கேட்டால், ''நான் அறுபது ஆண்டுகள் கடவுளை நினையாதிருந்து விட்டேன். இறைவன் புகழ் பாடவுமில்லை; இறைவன் மந்திரத்தை ஓதவுமில்லை. அவை எல்லாம் வீணாகக் கழிந்த நாட்கள் ஆகிவிட்டன. அறுபதாவது வயதில்தான் ஒரு மகானைச் சந்தித்தேன். அவருடைய சந்திப்பின் பின்பு தான் தினமும் கடவுளைத் தியானித்து அவருக் குரிய மந்திரத்தை ஓதிக்கொண்டு வருகின்றேன். அறுப தாண்டுகளாக ''ஆலயந் தொழுவது வேலை வினைக்கேடு'' என்றிருந்த நான் அம் மகானுடைய நல்லுபதேசத்தின் பின் தினமும் தவறாது கோவிலுக்குச் சென்று வருகிறேன்.

''நான் இப்போ பதினைந்து ஆண்டுகளாக தினமும் கோவிலுக்குச் செல்லாமல் சாப்பிடுவ தில்லை; தூங்குவ தில்லை. தினமும் இறைவன் புகழ் பாடாமல் சாப்பிடுவ தில்லை; தூங்குவதில்லை. இறைவன் மந்திரத்தைக் குறைந்தது நூற்றெட்டு முறையாவது ஜெபம் செய்யாமல் தூங்குவ தில்லை. தூக்கம் வரா விட்டால் தூக்கம் வரும்வரை இறைவன் மந்திரத்தை, அதாவது, எனது உபாசனா மூர்த்தியின் மந்திரத்தை ஓதிக் கொண்டே இருப்பேன். தூக்கம் வந்து விட்டால் அந்த நினைவுடனேயே தூங்கிவிடுவேன். அது கனவில்லாத தூக்கம். ஆழ்ந்த தூக்கம். சரியாக மூன்று மணிக்கே நித்திரை விட்டு எழுந்து விடுவேன். எழும்போது எனது உபாசனா மூர்த்தியின் நினைவோடேயே எழுவேன். அதிகாலை நான்கு மணி தொடக்கம் ஆறு மணிவரை பிரம முகூர்த்தமாகும். அந்த நேரத்தில் தவறாது தியானம் செய்து வருகின்றேன்.

''இந்தச் சாதனைகளினால் இந்தப் பதினைந்து ஆண்டுகளும் புதிய வாழ்வாக மலர்ந்துள்ளது. ''இறைகளோடு இசைந்த இன்பம்; இன்பத்தோடு இசைந்த வாழ்வு'' என்று சுந்தரர் கூறிய வண்ணம் இன்பவாழ்வு வாழ்ந்து வருகின்றேன்.

இப்போ கடந்த அறுபது ஆண்டுகளையும் பற்றிச் சிந்தித்துப் பார்க்கின்றேன். அந்த அறுபது ஆண்டு கால வாழ்க்கையும் வெறும் சூனியமாகவே காணப்படுகின்றது. அந்த வாழ்க்கையினுல் எனக்கும் எவ்வித பிரயோசனத்தையும் காணவில்லை. பிறருக்கும் எவ்வித பயனையும் செய்யவில்லை.

''ஒரு பூச்சியமா, இரண்டு பூச்சியமா பெரியது?" என்று கேட்டால் இரண்டும் பூச்சியம் தான். ஆனுல், அவற்றுக்கு முன்னுல் ஒன்றை இட்டால் ஒரு பூச்சியம் பத்து ஆகிறது இரண்டு பூச்சியம் நூறு ஆகிறது. இதே போல, எனது அறுபதாண்டுகால வாழ்க்கையும் வெறும் பூச்சியமாகவே காணப்பட்டது. கடவுளை என்றைக்கு நினைக்கத் தொடங்கினேனே அன்றே பூச்சியத்திற்கு முன்னுல் இட்ட ஒன்றினுல் பூச்சியம் விலை பெற்றது போல அடியேனும் மனிதன் ஆனேன். அதற்கு முன்பு உருவத்தில் தான் மனிதன். உள்ளத்திலும் செயலிலும் மிருகம் ஆயிருந்தேன். அந்த ஒன்று தான் கடவுள். '' ஒன்றே குலமும் ஒருவனே தேவனும். '' மனித குலம் ஒன்று தான்; இறைவனும் ஒன்று தான் என்ற ஞானம் உதித்தது.

'' மிருக வாழ்க்கைக்கும் மனித வாழ்க்கைக்கு மிடையில் ஒரு சிறு எல்லைக் கோடு இருக்கிறது. அதுதான் கடவுள் நினைவு. கடவுள் நினைவு உள்ளவன் மனிதன் ஆகிருன். அக் கடவுள் நினைவு இல்லாதவன் மிருகம் ஆகிருன். அடியேன் பதினைந்து ஆண்டுகள் மாத்திரமே மனித வாழ்வு வாழ்ந்துள்ளேன். அறுபதாண்டு காலமும் மனித உருவில் மிருக வாழ்க்கை வாழ்ந்துள்ளேன். மிருகமும் உண்ணுகிறது; உறங்குகிறது; இனத்தைப் பெருக்குகிறது. அடியேனும் அப்படியே தான். அறுபதாண்டுகள் உண்டு உறங்கி இனத்தைப் பெருக்கினேன் மிருகத்துக்கோ நாளையைப் பற்றிய கவலை இல்லை. அதற்குப் பொறுமை இல்லை; கோபம் இல்லை; லோபம் இல்லை. அடியேன் அறுபதாண்டு காலமும் கோபம், லோபம், மோகம், குரோதம், மதம், மார்ச்சரியம் என்ற ஆறு தீய குணங்களுக்கும் அடிமையாகி மிருகங்களிலும் கேடாக வாழ்ந்தேன் பேரப் பிள்ளைகளைக் கண்டும் எனது பேராசை என்னை விட்டு நீங்கவில்லை.

"ஆனபடியினுல் தான் உண்மை மனிதனுக வாழ்ந்த பதினைந்து ஆண்டுகளோடு மிருக வாழ்க்கை வாழ்ந்த அறுப தாண்டுகளையும் சேர்த்துக்கொள்ள அடியேன் விரும்பவில்லை. மனித வாழ்க்கை வாழ்ந்த பதினைந்து ஆண்டுகள் தான் அடியேனுடைய வாழ்வில் சேர்த்துக் கொள்ளப்பட வேண் டியவை. ஆகவே, அடியேனுடைய வயது பதினைந்து என்று கூறுவதை நீங்களும் ஏற்றுக்கொள்வீர்கள். அடியேனைப் போல நீங்களும் கவலையின்றி மகிழ்வுடன் இருக்க விரும் பினுல், மனித வாழ்வு வாழ விரும்பினுல், இன்றே இறை வனுடைய நாமத்தை ஓதுங்கள். இறைவன் வேறு, இறை வனுடைய நாமம் வேறு அல்ல. இரண்டும் ஒன்றேதான்.

"இறைவனுடைய நாமம் இடைவிடாது மனதில் இருக்குமானுல் மனம் தான் நினைத்த இடமெல்லாம் அலை யாது. நாம் சொன்னபடி எல்லாம் அது கேட்கும். பெறு தற்கரிய இம் மானிடப் பிறவியைப் பெற்றவன் இப் பிறவி யிலேயே ஈசுவரனை அடைய முடியாது போனுல் வீணில் பிறந்தவனே யாவான்.

"அடியேனுடைய வாழ்வில் முதலில் ஈசுவரனைத் தேடி ஆத்மஞானத்தைப் பெற்றிருந்தேனுயின் வீணுகக் கழித்த அறுபதாண்டு வாழ்க்கையும் அடியேனுக்கும் அடியேனைச் சேர்ந்தவர்களுக்கும் எவ்வளவோ பயனுள்ள வாழ்க்கை யாகக் கழிந்திருக்கும். அடியேன் விட்ட பிழையை நீங்களும் விடக் கூடாது என்று கருதியே அடியேனுடைய வயதை பதினைந்து என்று கூறிக் கொண்டு வருகின்றேன். அடியே னுடைய சொந்த அநுபவம் உங்களில் யாரையாவது விழித் தெழச் செய்தல் வேண்டும். அங்ஙனம் விழித்தெழச் செய்ய முடியுமானுல், அதனையே பெரும் பேருகக் கருதுவேன். மனச் சஞ்சலம் இல்லாத மனிதனே இல்லை என்று கூறலாம். மனச் சஞ்சலம் தீர இது ஒன்றே வழியாகும்.'' என்று முடித்தார் தாத்தா.

"தனக்குவமை யில்லாதான் தாள் சேர்ந்தார்க் கல்லால் மனக்கவலை மாற்றல் அரிது" என்பது வள்ளுவர் கருத்து.

எல்லாம் வல்ல தன்மையினுல் தனக்கு நிகரானவர் வேறு எவருமில்லாதவனுகிய இறைவனிடத்திற் சரண் புகுந்தவர் கள் தாம் தங்களுக்கு வந்த மனக் கவலையைப் போக்கிக் கொள்ளலாம். மற்றவர்களுக்கு முடியாது.

நமக்கு ஒரு மனக் கவலை வந்தால் அதைப் போக்கிக் கொள்ள நம்மைக் காட்டிலும் சிறந்தவனுன வேருெருவனி டம் போகிருேம். அவன் காலில் விழுந்து கூடக் கேட்டுக் கொள்ளுகிருேம். அவனுல் அது முடியவில்லையானுல் அவனைக் காட்டிலும் சிறந்தவனென்று இன்னெருவனிடம் அடைக் கலம் புகுகின்ருேம். இப்படிப் பலரிடத்தில் சென்றும் நம் மனக்கவலை நீங்காதபோது, இந்த எல்லாருக்கும் மேலாக, அவனுக்கு மேல் எவனும் இல்லாதவனுன இறைவனிடத்தில் சரணுகதி அடைந்தால் தான் அந்த மனக் கவலை மாறும்.

தர்மங்கள் நிறைந்த சமுத்திரம் போன்று சாந்த மய மாக இருக்கின்ற இறைவனிடத்தில் சரணுகதி அடைகிறவர் களைத் தவிர மற்றவர்கள் அதர்மம் நிறைந்த சமுத்திரம் போல் இருக்கிற உலக துன்பக் கவலைகளை நீக்கி நிம்மதி அடைய முடியாது. இறைவன் தர்மங்களின் சமுத்திரம். ஆனுல், சாதாரண சமுத்திரம் போல் அலைமோதிக் கொண்டு அமைதியற்ற சமுத்திரம் அல்ல. அசைவில்லாத சாந்த மயமான சமுத்திரம். அந்தச் சமுத்திரத்தை அணுகினுல் நமக்கு அற உணர்ச்சியும் அமைதியும் கிடைக்கும். அதனுல் அற ஆழி அல்லாத பிற ஆழியான மற ஆழி என்ற உலக துன்பங்களை நீந்தி மனக் கவலைகளை மாற்றிக் கொள்ளலாம்.

இதுவரை சொல்லப் பட்டவைகளை எண்ணிப் பார்த் தால், ''ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்'' என்பது பெறப்படும்.

● ● ●

## கலிகாலம் . . . (சென்ற சுடர்த் தொடர்ச்சி)

வீமன் நிற்க ஒப்புக் கொண்டான். அடுத்த கேள்விக்கும் இதே கதிதான். அர்ச்சுனன் முடக்கப்பட்டான். பிறகு தொடர்ந்து நகுலனும் சகாதேவனும் வட்டத்திற்குள் நிற்க வேண்டிய தாயிற்று. வெகு நேரமாகியும் சகோதரர்கள் வராதிருக்கவே நான் காலமானியை அனுப்பினேன். அவன் வந்து இந்தத் தகவல்களைத் தெரிவித்தான். நான் உடனே அங்கே விரைந்தேன்.

''குதிரைக்காரன் என்னைக் கண்டதும், நிலத்தில் விழுந்து வணங்கினான். நடந்ததைப் பணிவுடன் சொன்னான், கேள்விகளைச் சொல்லுமாறு கேட்டதும், அவன் ஒவ்வொன்றாகத் தெரிவித்தான். கலிகாலம் புகத் தொடங்கி விட்டது என்பதற்கு அவை சாட்சியம் கூறின. அவைகளை நினைத்தாலேயே வேதனையாக இருக்கிறது. மிக இழிவானது கலிகாலம்!'' தர்மபுத்திரர் பெரு மூச்சுடன் சொல்லி ஓய்ந்தார். மந்திரிக்கு அவர் விவரித்த குதிரைக் காரனின் கேள்விகளும், அவைகளுக்கு யுதிஷ்டிரர் தந்த சரியான பதில்களும் இவை தாம்:

''சுவாமி! என் முதல் கேள்வி இதுதான், நான் இந்தக் குதிரையை ஓட்டி வரும் போது, வழியில் ஒரு விசித்திரக் காட்சியைப் பார்த்தேன். பயங்கரமான பெரிய கிணறு ஒன்று இருந்தது. அதன் மேடை விளிம்பில் கிணற்றுக்குள் நோக்கியபடி ஒரு சிறு காசு தொங்கிக் கொண்டிருந்தது. அந்தக் காசைப் பற்றிக் கொண்டு குன்று போல் பெரிய அளவில் துருப்பிடித்த இரும்பு தொங்கியது. இவ்வளவு பளுவுக்கும் அக்காசு கிணற்றில் விழவில்லையே! ஏன்?

தருமபுத்திரருக்கு வெறுப்பு மேலிட்டது. ''என் ஆட்சிக் காலத்தில் இந்த அநியாயம்! கலிகாலம் வந்து விட்டதற்கு இது அடையாளம். அறம் நெறி எதுவும் நிலைக்காது. யாராவது ஒரு சிறு காசு அளவுக்கு தான தருமம் செய்வார். அதன் பலத்திலே மலையத்தனை பாவக் குவியலைச்

செய்து சேமித்துக் கொள்வார்கள். அந்தச் சிறு தர்மமும் நாளடைவில் நசித்ததும்' அவ்வளவு பாவச் சுமையையும் சுமந்து கொண்டு பாழுங் கிணறு போன்ற நரக வாழ்வில் விழுந்து உழல்வார்கள்,, என்று பதில் சொன்னார். குதிரைக் காரன் வீமனை விடுவித்து விட்டு அடுத்த கேள்வியைக் கேட்டான்.

''வழியில் இரண்டாவதாக ஒரு அதிசயத்தைக் கண்டேன். ஐந்து கிணறுகள் இருந்தன. ஒன்று நடுவிலும் மற்றவை அதைச் சுற்றிலும் இருந்தன. ஐந்து கிணறுகளிலிருந்தும் தண்ணீர் பொங்கி வழிந்து கொண்டிருக்கிறது. நடுக் கிணறு மட்டும் மற்றக் கிணறுகளில் நீர் கொஞ்சம் குறைந்ததும் உடனே தன் நீரால் அவைகளை நிரப்பி விடுகிறது. ஆனால் நடுக்கிணறு வற்றினால் மற்ற எதுவும் உதவுவதில்லை. இதற்கு என்ன காரணம்? பொருள்?''

தர்மபுத்திரர் வேதனைப் பெருமூச்சுடன் பதிலளித்தார்: '' கலியின் அலங்கோலம் இது. இளைஞர்கள் கடமை, பண்பு எதையும் கைக்கொள்ள மாட்டார்கள். தந்தை பாடுபட்டு தம் புதல்வர்களைக் காப்பாற்றுவான். தகப்பன் செயலற்றுப் போனதும், தனயர்கள் அவரைப் புறக்கணிப்பார்கள்; காப்பாற்ற மாட்டார்கள். பெற்றவர்கள் வயோதிபப் பிராயத்தில் நிராதரவாகத் திண்டாடுவார்கள். இந்த உண்மையைத் தான் அந்தக் கிணற்று நிகழ்ச்சி அறிவிக்கிறது.''

குதிரைக்காரன் மூன்றாவது கேள்வியைக் கேட்டான், '' பசுவும் அதன் கன்றும் ஓரிடத்தில் விசித்திர நிலையில் இருக்கக் கண்டேன். பசுவிடம் கன்று பால் ஊட்டுவதை விட்டு விட்டு கன்றிடம் பசு பால் ஊட்டுவதைக் கண்டேன். இந்த அக்கிரமத்திற்கு என்ன கருத்து?''

தருமபுத்திரருக்குத் துக்கம் நெஞ்சை அழுத்தியது. கலியைச் சபித்துக்கொண்டே பதிலளித்தார். '' கலிகாலத்துத் தாய் தந்தையர் செய்கிற இழி செயல் இது. ஒரு குழந்தை பிறக்க வேண்டியதுதான்; அதன் பேரைச் சொல்லிக்கொண்டு உற்றார் உறவினரிடமெல்லாம் பணம் பறிப்பார்கள். பெண்களை விற்றுப் பிழைப்பர்.

(தொடரும்)

# சேரிடம் அறிந்துசேர்

குழந்தைகளே ! உங்களுக் கொரு குட்டிக் கதை சொல்லுகின்றேன். உங்களுக்கு மட்டும் அன்று; பெரியவர்களுக்கும் அதில் பாடம் இருக்கிறது. பூவுடன் சேர்ந்த நாரும் மணம் பெறும். சாக்கடையுடன் சேர்கின்ற கங்கை இழிவு பெறும். எனவே நீங்கள் யாருடன் பழக வேண்டும் என்பதில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

நீங்கள் சிங்கத்தை மிருகக் கண்காட்சிச் சாலேயில் பார்த்திருப்பீர்கள். அதைப் பற்றிப் பாடத்தில் படித்திருப்பீர்கள். அது வன விலங்குகளுக்கு இராஜா வாகும். சிங்கம் கர்ச்சித்தால் யானே அச்சத்தால் நடுநடுங்கும். காட்டு விலங்குகள் அங்கும் இங்கும் அலறி ஓடிப் பதுங்கிக் கொள்ளும். சிங்கம் கம்பீரமான மிருகம். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் அது குட்டி போடும். எனவே அது வீரியம் மிகுந்த மிருகம்.

ஒரு சமயம் சிங்கக் குட்டி ஒன்று கழுதைக் கூட்டத்தோடு சேர்ந்துவிட்டது. கழுதைகளோடு பழகப் பழக அதனுடைய வீரியத்தை மறந்து விட்டது. அதனுடைய கம்பீரமான நடையை மறந்து, கழுதை போன்று நடக்க ஆரம்பித்து விட்டது. அதனுடைய தோற்றமே கழுதை போன்று ஆகிவிட்டது. அதனுடைய கம்பீரமான கர்ஜனே போய் கழுதையின் '' காள் ! காள் !! '' என்ற காட்டுக் கத்தல் சத்தம் வெளிப்பட்டது. ஆனுல் அதற்கு இருந்த இறுமாப்புத் தான் என்னே! என்னே!! கழுதைகள் எல்லாம் சேர்ந்து தங்கள் கூட்டத்திற்கு அதைத் தலேவராக்கி விட்டன. தனக்குத் தலேமைப் பதவி கிடைத்ததைக் குறித்து அது செருக்கு மிகக் கொண்டது. கழுதைகள் அதைத் தலேவராக மட்டுமா ஆக்கின? கூட்டத்தில் அதன் வாயிலிருந்து கழுதை மொழி வெளிப்பட்டதால் கழுதைகள் எல்லாம் கரகோஷம் செய்து அதை வெகுவாகப்

புகழ்ந்தன. அப் புகழ்ச்சி வெள்ளத்தில் அது மூழ்கித் திண்டாடியது. கழுதையின் போற்றுதலைத் தனக்குரிய சிறப்பாக எண்ணித் தன்னிலும் மிக்கார் ஒருவருமில்லை என்று மகிழ்ச்சி அடைந்தது; தந்தையிடம் சென்று தன் பெருமைகளையும் திறமைகளையும் எடுத்துச் சொல்ல வேண்டும் என்று அது எண்ணியது.

அதன் தந்தை குகையில் தனித்திருந்தது. தந்தையிடம் சென்று கழுதை போன்று கத்திப் பெருமிதத்துடன் நின்றது. தன் மைந்தனுடைய சிறுமையை தந்தையாகிய சிங்கம் புரிந்து கொண்டுவிட்டது. "குழந்தாய்! உன் குரல் நீ எந்தக் கூட்டத்துடன் சேர்ந்திருந்தாய் என்பதை விளக்கி விட்டது. தற்பெருமை கொண்ட கசடர்கள் தங்கள் சிறுமையைத் தாங்களே முரசுகொட்டி வெளிப்படுத்துவார்கள். கயவர்கள் கூட்டத்தில் சேர்ந்து சிறுமைக்கு ஆளாகி விட்டாய் அற்பப் பிராணிகளின் தலைவா! நீ என் மைந்தன் அல்லன்!" என்று தந்தையாகிய சிங்கம் கடுமையாகப் பேசியது.

"தந்தையே! எங்கள் சபை என்னை அறிவாளி என்று போற்றுகின்றது. நீங்கள் என்னை இப்படி வையலாமா?" என்றது சிங்கக் குட்டி.

"அட அற்பனே! உன்னுடைய கர்வந்தான் என்னே? முட்டாள்கள் புகழ்ந்தால் அறிஞர்கள் மகிழ்ச்சி அடைய மாட்டார்கள். கழுதை போன்ற அற்பப் பிராணிகள் எதைப் புகழ்கின்றனவோ சிங்கமாகிய பெருந்தன்மை வாய்ந்த நாங்கள் அதை இகழ்வோம். இதை நீ அறிந்துகொள்!" என்றது தந்தையாகிய சிங்கம்.

சிங்கக் குட்டியின் கர்வம் அடங்கியது. தன் பிழையை உணர்ந்தது. பொருந்தாத கூட்டத்தில் சேர்ந்து தான் அடைந்த சிறுமையைக் குறித்து வருந்தியது. தந்தையிடம் மன்னிப்புக் கேட்டது. "இனி சிங்கக் கூட்டத்துடன் இருப்பேனேயன்றி அற்பர்களுடைய சகவாசத்தை மேற்கொள்

ளேன் '' எனத் தந்தையிடம் சத்தியம் செய்தது. தன் அற்ப புத்திக்கு வருந்தியது. அன்று முதல் அது பெருந்தன்மை வாய்ந்த மிருகமாக மாறியது. குழந்தைகளே ! சிங்கக் குட்டியின் மூலம் நீங்கள் பொருந்தாத கூட்டத்தில் சேரக் கூடாது என்னும் படிப்பினையை அறிந்து கொள்ளுங்கள். நல்லவர்களோடு சேர்ந்து நல்லவர்களாக மாறி உங்களுக்கும் உங்கள் குடும்பத்துக்கும் உங்கள் நாட்டுக்கும் நன்மையைத் தேடிக் கொள்ளுங்கள்.

நன்றி:— **தர்மசக்கரம்.**

★ ★ ★

## புண்ணிய தானம் (சென்ற சுடர்த் தொடர்ச்சி)

இதைக் கேட்டதும் ஜனகர் முகம் வாடியது. உள்ளம் இரக்கத்தால் கனத்தது. " தர்மதேவரே ! இவர்கள் செயல் களையும் தண்டனைகளையும் கேட்டு எனக்கு மிகவும் வருத்த மாகத்தான் இருக்கிறது. இருந்தாலும் இவர்கள் இரக்கப் படத் தக்கவர்கள். '' என்றார். '' சுவாமி! இவர்கள் பேரில் இரக்கம் காட்டவே கூடாது. உலகத்தில் ஒரு பாவத்தையும் இவர்கள் விட்டு வைக்கவில்லை. இவர்களுக்காகத் தயை புரிவது வீண் முயற்சி. நீங்கள் புறப்படுங்கள் !'' காலதேவர் ஜனகரை வழியனுப்புவதில் முனைந்தார்.

ஜனகருக்குக் கண்ணீர் ததும்பியது. '' இந்தப் பாவி களுக்கு எந்த விதத்திலும் விமோசனம் கிடையாதா ? நான் என் புண்ணிய பயனை அனுபவிப்பதற்கு முன்பாக, இவர் களுடைய துயரை நீக்க விரும்புகிறேன். தயை செய்து இதற்கு ஒரு வழி சொல்லுங்களேன்!" என்று கெஞ்சினார் ஜனகர்.

இயமதேவர் பார்த்தார், அவர் உள்ளமும் நெகிழ்ந்தது. ஜனகரை வணங்கி " மகாத்மா ! நீங்கள் தான் கருணையின் முழு உருவம். இப்பாவிகளைக் கடைத்தேற்றுவதில் உங் களுக்கு ஆத்மதிருப்தி ஏற்படுவதை நான் தடுக்கவில்லை.

உங்களுடைய புண்ணியத்தில் சிறிதளவு இந்த இழிந்தவர்களுக்கு அருளுங்கள். பகவானுடைய திவ்விய நாமத்தை இவர்களுக்கு உபதேசித் தருளுங்கள். இப்பாவிகள் அத்தாரக மந்திரத்தை உச்சரித்துக்கொண்டே நரகத் தளையை விட்டு விடுதலை பெற்றுவிடுவார்கள்.'' என்றார். ஜனகர் பேரானந்த பரவசத்துடன் நரகத்திற்குள் ஓடினார். தாம் அறநெறியுடன் தூயவாழ்வு வாழ்ந்து ஈட்டிய புண்ணியத்தில் பெரும் பகுதியை அர்ப்பணித்து அங்கிருந்த பாவிகள் அனைவரையும் முத்திபெறச் செய்தார். பாவிகளைத் தேவர்களாக்கி விட்டது மாகாத்மா ஜனகரின் புண்ணியதானம்.

# வினையும் வியாதியும்

( சுவாமி விமலானந்தர் )

எதற்கும் ஒரு காரணம் இருந்தாக வேண்டும். நமக்கு வருகின்ற வியாதிகளுக்கும் காரணம் இருக்க வேண்டும். சில நோய்களுக்கு நமது தீய நடத்தையே காரணம் என்பதை நமது பெருமக்கள் கண்டு பிடித்துள்ளனர். தொடர்ந்து அந்த விஷயத்தைப் பற்றிச் சிந்திப்போமாக.

1. வெட்டிப் பேச்சு, பிறரை இகழ்ந்து பேசுவதைக் கேட்டு இன்புறுதல், பிறரை இகழ்ந்து பேசுதல், மோசமான பாடல்களைக் கேட்டல் முதலியவற்றில் ஈடுபடுகிறவர்கள்:

செவிப்புண், செவியில் ஒலியுடன் ஓசை மற்றும் காது வீக்கத்தினால் அவதியுறுகின்றனர்.

2. கோர்ட்டு வழக்குகளில் உண்மையைப் பொய்யாக்கி பொய்யை உண்மையாக்கி வழக்காடும் வழக்குரைஞர்கள்.

நிறக்குருடு, மாறுகண், கண்ணில் பூப்படர்தல், முதலிய கோளாறுகளுக்கு இரையாவதோடு மறு ஜன்மத்தில் குறையுடன் பிறக்கிறார்கள்.

— சுவாமி விவேகானந்தர்

( 134-ம் பக்கம் பார்க்க )

**உபதேசம்**

இரக்கமின்றி வட்டி வசூல் செய்யும் உலோபிகளின் கொடுமைக்குக் கீழ்ப்பட்டு வேதனையால் புலம்புகிறது மேலையுலகம்; புரோகிதரின் கொடுமைக்குக் கீழ்ப்பட்டு வேதனையாற் புலம்புகிறது கீழையுலகம். சு. வி.

# முருகனைக் காணும் முறை

( வித்துவான் பொ. அ. துரை அரங்கசாமி )

நேரிசை ஆசிரியப்பா

உண்டோ கடவுள்? உண்டே கடவுள்!
யாண்டோ அவன் உளன்? யாண்டும் உளனே!
கண்ணில் படுவனோ? ஏன் பட மாட்டான்?
எங்கே தெரிவன்? எங்கும் தெரிவனே!
என்னே அதிசயம்? அதிசயம் இல்லையே!
காணல் இல்லையே! காணின் காணலாம்!
யாண்டோ? யாண்டோ? யாண்டும்! யாண்டும்!
யாண்டும் இருப்பன எண்இலாப் பொருள்களே!
யாண்டும் இருப்பவன் அவனே! அவையல!
என்னே மடமை? இல்லை! உண்மை!
மரமும் மனையும் வயலும் மலையும்
விலங்கும் பறவையும் வேறுள பிறவும்
அவனோ? அந்தோ! அழிந்திடும் அவையெலாம்!
வளரும்! தேயும்! வருந்தும்! திருந்தும்!
அவையெலாம் அவனோ? அவையெலாம் அவையே!
அழகே இளமையே அளவில் ஆற்றலே
அழிவிலா இயல்பே அறிவின் நிறைவே
இன்பமே இனிமையே இருள்இலா மையே
கனிவே ஒளியே கடவுள் வடிவம்
ஆம்என முதலில் அறிதல் வேண்டும்!
இவையெலாம் பொருளாய் எழில்மிகக் காட்டும்
தமிழ்ச்சொல் முருகே அமிழ்தினும் இனியது;
முருகே முருகன்; முருகனே கடவுள்;
யாண்டுளது அழகோ ஆண்டுளன் முருகன்;
மலரிலும் மணமலர் மரத்திலும் மயிலிலும்
பூங்கா வனத்திலும்
புதுநீர் ஆற்றிலும்
மரஞ்செறி மலையிலும்
மங்கைய ரிடத்திலும்
அமைந்த அழகெலாம்
அவனது காட்சியே!
யாண்டுள திளமை
ஆண்டுளன் முருகன்!

( 131-ம் பக்கம் பார்க்க )

### உபதேசம்

என் தேசத்துள்ள ஒரே ஒரு நாயாயினும் உணவின்றி இருக்குமளவும், எனது மதம் முழுவதும் அதற்கு உணவளிப்பதேயாம்.

— சுவாமி விவேகானந்தர்.

## * ஒருவரையும் பொல்லாங்கு சொல்லவேண்டாம்

'எவரையும் தீய சொற்களால் நிந்திக்காதே' என்பது பொருள். ஒரு மரத்திலே கனியும் உண்டு. காயும் உண்டு. காயை விடுத்து கனியைப் பறித்தல் சாதாரண மக்களுடைய பண்பாடு. ஒரு சிலர் கனியை விடுத்துக் காயைப் பறிப்பதும் உண்டு. அவர்களை மக்கள் வேறானவராகவே கருதுவர். அதுபோல இன் சொற்களும் வன் சொற்களும் உள்ள உலகில் இன் சொற்களைப் பேசி மகிழச் செய்தல் தான் மனிதப் பண்பாடு. ஒரு சிலர் பழக்கத்தினாலோ அன்றி மனப் பண்பாடு இன்மையினாலோ வன் சொற்களையே தான் பேசிக் கொண்டிருப்பர். பிறனொருவன் நம்மை தீய சொற்களால் வையும் போது எமது மனம் என்ன பாடு படும்! அதுபோல நாம் பேசும் தீய சொற்களும் மற்றவர் களுடைய மனதைப் புண்படுத்தும் என்பதை உணர வேண்டும்.

கேட்பதற்கு இனிமையாகவும் பச்சாத்தாபம் உள்ள தாகவும் பேசினால் மட்டும் போதாது. அகத்தில் வஞ்சனை எண்ணாததாகவும் இருக்க வேண்டும். அதுதான் இன்சொல், வடை வைத்திருந்த காகத்தைப் பார்த்து நரி இச்சகம் பேசியது. அதாவது, காகத்தின் கரூமை நிறமே உலகில் மிக அழகுடையது என்று பசப்பியது. அதனுடைய குரலே மிக மிக இனிமையுடையது என்று பேசியது. வார்த்தைகள் இனியன. ஆனால், உள்ளே வடையைக் கவர வேண்டும் என்ற வஞ்சனை நிரம்பி இருந்தது. காகம் இச்சகத்தில் மயங்கி வாயைத்திறந்த போதுதான் நரியின் பேச்சில் வஞ்சகம் நிரம்பி இருந்தது என்பதைக் காகத்தால் உணர முடிந்தது.

தானம் கொடுப்பதில் புண்ணியத்தின் பலனுண்டு. தானம் கொடுக்க முடியாவிட்டாலும் இனிய வார்த்தைகளை

* "உலக நீதி" தொடர் கட்டுரைகளில் இரண்டாவது தொடர் கட்டுரை.

அன்போடும் வஞ்சமில்லாமலும் சொன்னால் அதனால் தானம் கொடுத்த பலனைக் காட்டிலும் அதிக நன்மை உண்டு. வஞ்சனை அற்ற இனிய வார்த்தைகளோடு தானமுங் கொடுத்தால் அந்தத் தானத்தைக் காட்டிலும் சிறந்தது இனிய வார்த்தை.

'யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரைதானே !' என்பது திருமூலர் திருவாக்கு. உலகில் எல்லாராலும் மிக இலகுவாகச் செய்யக்கூடிய அறம் இன்சொல் பேசுதலாகும். இதுவும் செய்ய முடியாதவர்கள் மனிதர்களாக வாழ முடியாது.

மலர்ந்த முகம் யாவரையும் வரவேற்கிறது. இனிய பார்வை வந்த காரியம் என்ன என்பதை அன்போடு கேட்கிறது. பின் மனம் அனுதாபத்தோடு சிந்தித்து இனிய வார்த்தைகளாக வஞ்சனை இன்றி வெளியிடுகிறது. வெளியிடப்படுகிற கருத்தே தான் தர்மச் செயலாகிறது. மனம், வாக்கு, காயம் என்ற மூன்றும் சுத்தமாகச் சேர்ந்த வஞ்சகமற்ற இன்சொல்லே அறம் என்று பேசப்படுகிறது.

(தொடரும்)

● ● ●

129-ம் பக்கத் தொடர்ச்சி —

யாண்டுள தாற்றல் ஆண்டுளன் முருகன்
யாண்டுள தறிவோ ஆண்டுளன் முருகன்!
முருகன் தோன்றும் முறைமை இதனால்
அறியின், இல்லையே அவனிலா இடமென
உணரலாம்; கண்ணிற்கு ஒளிர்வன் என்பதும்
உணரலாம்; அதனால், உண்மைக் காட்சி
எப்பொருளிடத்தும் எண்ணிக் காண்பதே
முருகனைக் கண்ணால் முழுதும் காண்பதாம்;
கடவுளைக் கண்ணால் கவின்பெறக் காண்பதாம்;
கடவுள் உண்டே! கண்ணிற் படுவன்;
யாவும் அவனே, அல்லன இல்லையென
எண்ணி முருகனை எங்கும் இங்ஙன
கண்ணிற் கண்டு கவலை ஒழிகவே!

# வடிவேல்

( மொ. ஸ்ரீ செல்லம் )

" பயந்த தனி வழிக்குத் துணை வடிவேலும்
செங்கோடன் மயூரமுமே "

— கந்தர் அலங்காரம்

பயந்த தனிவழியாகிய சம்சாரக் காட்டுவழியைக் கடந்து முத்தி நகரமாகிய கந்தனூரை அடைவதற்குரிய பாதை தனிவழி. இந்த வழியிலே போக்கு வரத்தே மிக அரிது. சிற்றின்ப போகங்களையே பெரிதாகக் கருதும் இயல்பை இயற்கையாகக் கொண்ட மனம் மொழு மொழு என்றிருக்கும் இந்தத் தார் றேட்டில், ஐம்புலன் என்ற காரில் லேசாகச் சென்று அழியும் இன்பங்களை நுகர்வதில் ஆர்வங் கொள்ளுமே அன்றி, காடும் மலையும் அரும் புதரும் விலங்கும் பாம்பும் நிறைந்த முத்தித் தனிவழியே முனைந்து சென்று குன்றின் மேல் குடிகொண்ட ( சஹஸ்ரார சக்கரம் ) குமரன் வாழும் குமர கோட்டத்தை நாட எப்படி முயலும் ?

**உபதேசம்**

என் வயது ஏற ஏற, எல்லாம் ஆண்மையில் அடங்கியிருப்பதாக எனக்கு மென்மேலும் தோன்றுகிறது. இது எனது புதிய உபதேசம். ஓர் ஆண்டகையைப் போன்று தீயதையும் செய்க. கட்டாயமானால் தீயோனவுகம் இரு, பேரளவிற்கு !

வெள்ளிக்கிழமை கிருத்தையுங் கூட அன்று மாலையில்தான் ''என் மனைவி'' என்ற படம் முதன் முதலாக நம் மூர்த் தியேட்டரில் தொடங்குகிறது. கூட்டம் திரள் திரளாக எங்கே சாயும் ? கந்த கோட்டத்திற்கா? சினிமாக் கொட்டகைக்கா? இதுதான் இன்றைய இயற்கை. மாயையோடு ஆத்மாவுக்குத் தொடர்பு ஏற்பட்ட நாள்

முதல் மனித இயற்கையும் இதுதான். எனவே குமர கோட்டத்து வழி என்றும் தனி வழி தான். என்றே பல்லாயிரம் ஆண்டின் இடையீட்டின் ஓர் அகத்தியர், ஓர் இடும்பன், ஒரு வள்ளி, ஓர் அருணகிரி. இத்தகையோர் நடந்து சென்று பெருவாழ்வும் பேரின்பமும் பெற்ற ஒப்பற்ற வழி.

இந்தத் தனி வழியிலேயே வழிப்பறிக் கள்வர் ஐவர் என்றும் காத்திருப்பர். நாம் கைப் பொருளாகக் கொண்டு செல்லும் பக்தி, ஞான, வைராக்கிய சீலங்களை எல்லாம் அடித்துப் பறித்துக் கொள்ள முயல்வர். காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மார்ச்சரியம் என்ற ஆறு பேய்கள் நம்மை மருட்டிப் பிடித்துக் கொள்ளும். சந்தேகம், சஞ்சலம் என்னும் சூறுவளி சுழற்றி அடித்து நாம் முன்னேற வொட்டாமல் தள்ளும். சம்சாரம் என்ற கடல் கொழித்துப் பொங்கி வழி மறிக்கும். நாத்திகம் என்ற கொல்லிப் பாவை நடுவே நின்று நம்மைத் தன் வசமாக்கி மாய்க்கும். இவ்வளவு இடர்கள் நிறைந்த தனிவழி அது.

இது மட்டுமா? இந்திரலோகம் தன் காமதேனு, கற்பக விருட்சம், சங்கநிதி, பதுமநிதி, தேவ அரம்பையர் இவர்களோடு பாதையின் இடையே ஒரு புறத்தில் காட்சி அளித்து, "எங்கே போகிருய் அப்பா? இதோ உனக்கு எல்லாப் போகங்களையும் அளிக்கக் காத்திருக்கிறேனே! நீ தேடும் இடம் இதுதான்!" என்று பசப்பும், சத்தியலோகம் பிரம்மனேடும் தாய் சரஸ்வதியோடும் காட்சி அளித்துப் புகழ், பெயர், செல்வாக்கு இவற்றை யெல்லாம் முன்னே காட்டி "போகாசிரியனுரும் வேத வன்மையும் கலை வன்மையும் உனக்குத் தர இதோ காத்திருக்கிறேனே! இவற்றைத் தானே தேடி வருகிருய்? கேவலம் அந்தச் சிற்றின்ப போகம் நிறைந்த இந்திர லோகத்தைக் கண்டு மயங்காமல் வந்து நீ நற் காரியம் செய்தாய். இதோ வேதசாஸ்திர அறிவு, இதோ கலை, இதோ வைத்தியம், இதோ சோதிடம், இதோ வேதாந்தம், இவற்றை உலகெங்கும் பரப்பிச் சிறந்த மேதாவி என்ற புகழ் பெற்றுச் செல்வாக்கோடு வாழப்பா!" என்று பிரம்மனும் கலைமகளும் கொஞ்சுவர், ஒரு கட்டத்தில்.

"நீயா ? என் குழந்தையல்லவா ! இதோ லோகாதி பத்தியம். சாதாரண லோகாதி பத்திய மல்ல! ஈரேழு பதினான்கு லோகாதி பத்தியம்! இரணிய கசிபு, இராவணன், பலி போன்றவர்களை அடக்கி, அவர்களிடமிருந்து பறித்து இந்த ஆதிபத்தியத்தை உனக்காக அல்லவா இவ்வளவு நாள் காப்பாற்றி வைத்திருக்கிறேன், பெற்றுக்கொள்!" என்பர். மகாவிஷ்ணு வைகுண்டத்தோடு தோன்றி "என்றும் இத் திரு அழியாமல் காக்க நான் உன்னுடனேயே இருந்து விடுகிறேன் அப்பா !" என்று அன்பொழுகக் கூறுவர். மகாலட்சுமி," இது பற்றில் சேர்ந்ததல்ல; ஆசை அல்ல; புகழ் விருப்பமல்ல: கேவலம் உலக க்ஷேத்திரத்துக்காகச் செய்யும் தரும அரசாட்சி. இதுவே தவத்தின் முடிவு !" என்று உபதேசிப்பார், வைகுண்ட நாதன். (தொடரும்)

★ ★ ★

128-ம் பக்கத் தொடர்ச்சி . . .

3. பொது ஜனங்களைக் கொல்லும் சக்தி வாய்ந்த ஏவுகணைகளைக் கண்டு பிடிக்கும் விஞ்ஞானிகள்.
   குணப்படுத்த முடியாத பயங்கர நோய்களுக்கு இலக்காகிறார்கள்.

4. நோயாளிகளைக் கொடுமைப் படுத்தி மோசமான மருந்துகளைக் கொடுத்து அதிக பணம் வாங்கும் கொடுமை மிகும் வைத்தியர்கள்.
   கருப்பை நோய்கள் மிகும் பெண்களாகப் பிறக்கிறார்கள் மிகுந்த கஷ்டத்திற்கு உள்ளாகிறார்கள்.

5. சித்தர்கள் போன்று நடந்து உலக மக்களை ஏமாற்றும் சந்நியாசிகள்.
   இளமையிலேயே அலித்தன்மையை அடைந்து அதிக ஏமாற்றத்திற்கு உட்படுவர்.

6. போதைப் பொருள்களை உட்கொண்டு ஒழுக்கக் கேடான செயல்களில் ஈடுபடுகிறவர்கள்.
   நோஞ்சலாகப் பிறந்து நரம்புத் தளர்ச்சி மற்றும் நோய்களினால் அவதிப்படுவர்.

# இரும்பும் கரும்பும்

( திருப்புகழ் மணி )

இரும்பும் கரும்பும் தனித் தனியே ஒவ்வொரு இயல்பைக் குறிக்கின்றன. திணிந்த அழுத்தமான கடின வன்மையை இரும்பு தன் குணமாகக் கொண்டது. லேசில் இளகாது; வளையாது; வளைந்து தானே வணங்க வேண்டும். வணக்கம் இல்லாத மனம் இரும்பு மனம். கருணை, தயை, ஜீவகாருண்யம் இவையெல்லாம் மன நெகிழ்ச்சியில் காணப்படும் குணங்கள். இந்தக் குணங்களை இரும்பு காட்டாது. காந்தத்தைக் கண்டால் ஒரே இழுப்பு இரும்புக்கு, அடியார்கள் மனம் காந்தத்தைக் கண்ட ஊசி போல, ஆண்டவனிடம் அணுகி அணுகி நிற்குமாம். கந்தன் எனும் காந்தத்தால் இழுக்கப்பட்ட போது இரும்பால் செய்யப்பட்ட ஊசி மனம் தனக்கும் காந்தத்திற்கும் இருக்கும் உறவை மறவாது நிற்கும்.

பக்தி நெறியில் ஈடுபட்ட அடியார்கள் மனம் இரும்பின் குணத்தில். காந்தத்தால் இழுக்கப்படும் இயல்பு ஒன்றை அடைந்துள்ளது. பக்தியின் இயல்பைச் சொல்லுங்கால் தாயுமானுர் பாடுவதும் பாருங்கள்: "ஊசி காந்தத்தினைக் கண்டு அணுகல் போலவே ஓர் உறவும் உன்னி உன்னி" செல்லுமாம், அன்பர் மனம். இது மாத்திரமல்ல, ஒருவித வன்மையும் ஆற்றலும் அன்பருக்கு உண்டு. என்ன கஷ்டங்கள் வந்தாலும் எவரெவர் என்னென்ன நிர்ப்பந்தத்திற்கு ஆளாகினுலும் ஆண்டவனிடத்தில் வைத்த பக்தி அசையாமல், தளராமல் வன்மையுடன் பற்றி நிற்பர். இது விஷயத்தில் இரும்பு முறிந்தாலும் முறியும்; அன்பர் உள்ளத்தில் ஆண்டவனிடம் ஊன்றிய நம்பிக்கை கொஞ்சமேனும் தளராது. இந்த வன்மையில் இரும்பை வென்றே இருக்கின்றுர்கள், அன்பர்கள் தாயுமானவர். "இரும்புசேர் நெஞ்சகக் கள்வனுனலும் உன்னை இடைவிட்டு நின்றதுண்டோ?" என்று பாடுகின்றுர். பக்தி எனும் உஷ்ணத்தால் இரும்பாய்ச்

சுயநலத்தையே நாடிநின்ற மனம், அன்பாய், கருணையாய் கரைந்து விடுகின்றது. ஆயினும் அம்மனம் இரும்பின் வன்மையை ஆண்டவன் நம்பிக்கையிலும் உறவிலும் வைத்துத் திகழ்கின்றது. கரைந்து உருகிய உள்ளத்தில் ஒரு நலம் கலக்கின்றது. அது கரும்பின் ரசமென்றே சொல்ல வேண்டும்.

**உபதேசம்**

ஒரு மதம் உண்மையானால் அப்போது மற்றவைபெல்லாம் உண்மையாகத்தான் இருக்க வேண்டும். ஆக, இந்து மதம் எனக்கு உடமையாகும் அளவிற்கு உனக்கும் உடமையாகும்.

— சுவாமி விவேகானந்தர்.

பேய்க் கரும்பைக் கொடுத்து ஏமாற்ற வேண்டாம். உம்முள் வளரும் சிவக் கரும்பைக் கொடுங்கள். மனதைக் கவரும் உருவம், நம்மை ஆட்கொள்ளும் பாவம், உலகையே திருந்தச் செய்யும் சித்திரம். துறவி மார்க்கத்தில் இரும்பின் வன்மையும் உலகினுக்கு நெகிழ்ந் துருகும் அன்பும் கரும்பினும் இனித்துருகும் உள்ளமு மன்றோ எதிர் நிற்கின்றன? பட்டினத்தடிகள் பால் கலந்தாற்போல் இரும்பும் கரும்பும் மணமுற்றால் உதவும் ஆற்றலும் நெகிழும் அன்பும் ஆண்டவன் நாம ருசியும் உலகத்தை அளாவப் பெறலாம்.

இந்தக் கரும்பு எங்கே காணப்படும் என்று வினவினால், பட்டினத்தார் சொல்லுகின்றார்;

"கண்டம் கரியதாம் கண்மூன்று உடையதாம்
அண்டம் போல்அழ கியதாம் — தொண்டர்
உடல்உருகத் தித்திக்கும் ஓங்குபுகழ் ஒற்றி
கடல் அருகே நிற்கும் கரும்பு."

சிவரசம் கரும்பின் ரசம். அப்பர் சுவாமிகள் பரமசிவன் வண்ணத்தை வகுக்குங்கால் பாடியதை நோக்கவும்.

"விரும்பும் வண்ணமும் வேதத்தின் வண்ணமும்
கரும்பின் இன்மொழி காரிகை வண்ணமும்
விரும்பு வார்தம் வினைதீர்த்திடும் வண்ணமும்
அரும்பும் வண்ணமும் ஆவர் ஐயாறரே."

இந்தவழி உலகேற்றத்திற்கு உத்தமமான வழி. உரிமைகளைச் சற்று மறந்து கடமைகளை நினைக்க வைக்கும். கடமைகளை நினைத்த சமூகம் ஆனந்தத்தைப் பெருக்குகின்றது. உரிமைகளையே நினைத்த சமூகம் சண்டை சச்சரவுக்கு இரை ஆகின்றது. கடமைகளில் முதல் கடமை உலகுக்கு அன்பு கூறுதலேயாகும்,

அம்மையப்பன் அல்லவா ஈசன்! ஜகத்துக்கெல்லாம் அம்மையாய் விளங்கும் பார்வதி தேவியின் இன்மொழியில் வளர்வது ஒரு கரும்பு - சிவமெனும் கரும்பு. இந்தக் கரும்பின் ருசி நாவில் தித்தித்து விட்டால், மற்றக் கரும்பு, தேன் இவற்றின் ருசி கைத்து விடும் என்றூர் அருணகிரியார். ''குமரனை மெல்ல மெல்ல உள்ள அரும்பும் தனிப் பரமானந்தம் தித்தித்தது அறிந்த அன்றே கரும்பும் துவர்த்து செந்தேனும் புளித்து அறக் கைத்ததுவே!'' என்பது கந்தரலங்காரம். "தேனுறு பரயுமடி திருவடி கண்டபேர்க்கு ஊனுருவுமில்லையடி ஒன்றையும் நாடாதே!'' என்பர் அகப்பேய்ச் சித்தர்.

பட்டினத்தடிகள் திருவுருவத்தை அநேக இடங்களிற் பார்த்திருக்கின்றோம். ஒரு பெருந் துறவியாய் நிற்கின்றூர். உலக்குக்குக் குறியாய் இருக்கவேண்டியதைக் கையில் எடுத்து அளிக்கத் தயாராய் இருக்கும் நிலை.

இதனை இரும்பின் வன்மையோடு பற்றி கருந்பாய்த் திகழும் சர்வதேச ஒற்றுமையில் திகழ்வோமாக!

● ● ●

# அலையாத இன்பம்

உனது வாழ்வில் நிரந்தரமான சுகத்துடன் நிம்மதியாக வாழ முடியுமா? என்ற விஷயத்தில் எள்ளளவும் சந்தேகப்படாதே. கருகிய கரி நெருப்புடன் சம்பந்தப்படும்பொழுது அதன் இயற்கையான கறுப்பு மாறி ஒளிர்கின்றது. அதேபோன்று உனது மனம் தெய்வீக ஒளியில் கலந்திருந்தால் சகஜமான துன்பங்கள் மாறி அலையாத இன்பம் இதயசுரப்பிகள் வழி சுரந்து வரும். கறள் பிடித்த இரும்பை காந்தம் ஈர்ந்தெடுக்காதது போன்று அழுக்கு நிறைந்த இதயத்தை தெய்வீக ஒளி கவர்ந்தெடுப்பதில்லை.

(தொடரும்)

## காந்தி மகான் பொன்மொழி

கடவுள் மனித இதயங்களைச் சோதனை செய்கிறூர். நம்மையும் நமது இதயங்களையும் நாம் அறிந்திருக்கும் அளவுக்கு மேல் அவர் அறிந்துள்ளார். நமது வார்த்தைகளை வைத்து அவர் எதையும் மதிப்பிடவில்லை. ஏனெனில் அறிந்தோ அறியாமலோ நாம் சொல்வது வேறு, நமது ஆழ்ந்த மனதில் நினைப்பது வேறு என்பதை அவர் அறிவார். அவருடைய ஸ்பரிசம் படவேண்டுமென்று எண்ணுவோரிடம் அவர் வியாபித்திருப்பார்.

## பூஜை (சென்ற இதழ் தொடர்ச்சி)

மந்திரி முகவாட்டத்துடன் சென்று அரசனுக்கு உற்றதை உரைத்தார். கண்ணனுடைய தேர் தூரத்தே வருவதைக் கண்டார்கள். மிக வேகமாக வந்துகொண்டிருக்கிறது. கண்ணன் திடீரென தேர்ச் சாரதி தாருகனிடம், "தாருகா! தேரைச் சந்தில் திருப்பு!" என்றான். தேர் ஏழைத் தச்சன் குடிசையின் வாயிலில் போய் நின்றது.

அரசன் மந்திரி பிரதானிகள் யாவரும் கண்ணனைத் தரிசிப்பதற்காக ஏழைத் தச்சனுடைய குடிசையை நோக்கி ஓடினர் கண்ணன் தேரில் இருந்து குதித்தான். ஏழைத் தச்சன் துளசி மாலையுடன் சென்று கண்ணனுடைய திருப்பாதங்களுக்குச் சூட்டிப் பாதங்கள் இரண்டையும் இறுக அணைத்துக் கொண்டான். வெகு நேரம் ஆயிற்று. ஏழைத் தச்சன் எழும்பவே இல்லை. கண்ணனுடைய கண்களில் இருந்து ஏழைத் தச்சன் மீது பொலு பொலு என்று நீர் சொரிந்தன. இக்காட்சியை அரசன் முதல் யாவரும் பார்த்துக்கொண்டு நின்றனர். எல்லார் கண்களில் இருந்தும் நீர் சொரிந்து அவரவர் பாதங்களை நனைத்தன.

இதற்கிடையில் தாருகன் ஓடிவந்து, "பெரியவரே பூஜைக்கு நேரமாகிறதல்லவா? எழுந்திரும்; பிரபு காத்து நிற்கின்றார்." என்று கண்ணனுடைய கால்களை விடுவித்தான். "பூஜை எப்பொழுதோ ஆகிவிட்டதே!" என்று கண்ணன் கலங்கிய கண்களுடன் சென்று தேரில் ஏறிக்கொண்டான். கிழவர் எழும்பவே இல்லை. கிழவர் தனது ஆத்மாவையே கண்ணனுடைய பாதங்களுக்கு அர்ப்பணித்து விட்டார். இப்பேறு யாருக்குத்தான் கிடைக்கும். அரசன் மந்திரி முதலானோர் உண்மையான பூஜை என்றால் என்ன என்பதை அப்போதுதான் உணர்ந்தனர்.

"அன்றே என்றன் ஆவியும் உடலும் உடமை எல்லாமுங்
குன்றே அனையாய் எனை ஆட்கொண்டபோதே கொண்டிலையோ"

என்று மாணிக்கவாசகப்பெருமானார் இறைவனிடம் முறையிடுவது ஆழ்ந்து சிந்திக்கவேண்டியதொன்றாகும். ஆத்ம சமர்ப்பணமே அன்பின் உச்சநிலை கொண்ட பூஜையாகும். இதனையேதான் அத்துவிதம் என்றும் இரண்டறக்கலத்தல் என்றும் தாடலைபோல்கூடி என்றும் சொல்லிக் கொள்கிறார்கள். நாம் செய்யும் புறப்பூஜை எல்லாம் இந்த அகப்பூஜைக்கு வழிநடத்துவதற்கே.

# தியாகச் சுடர்

தியாகிகள் சமுதாயம் உருவாகவேண்டும் என்ற சிறந்த பேரெண்ணத்தின் தோற்றமே குருகுலம். இக்குருகுலத்தின் இன்றைய வளர்ச்சி பல தியாகங்களின் அடிப்படையே எனின் மிகையாகாது.

குருகுலத்தின் தோற்றத்திற்கும் அதன் வளர்ச்சிக்கும் காரண கர்த்தாவாக இருந்தவர் அமரர் அப்புஜீ கதிரவேலு அவர்கள்.

" வெள்ளத் தனையது மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு "

என்பதற்கமைய வெள்ளையுள்ளம் கொண்டு கள்ளமில்லாது களிப்புடனே யாவரையும் எதிர்கொண்டு வாழ்ந்தவர் உத்தமச் சுடர் அப்புஜீ அவர்கள். பலவகையான தியாகங்களைப் புரிந்து சேவையாற்றினார்கள், அமரர் அப்புஜீ அவர்களும் அவரின் துணைவியாருமான சின்னம்மா அவர்களும். உள்ளத்திலுள்ளதையே செயல்மூலம் காட்டி அனைவரையும் கவர்ந்துவிட்ட மகான். இன்று அந்த உத்தமச்சுடர் அணைந்துவிட்டதே தவிர அவரின் தியாகப் பாதையிலே வீறுநடை போடக்கூடிய இளைய சமுதாயம் ஒன்று உருவாகிக்கொண்டு தான் இருக்கின்றது.

கரைச்சி சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தாரின் பெரு விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் அமரர் அப்புஜீ கதிரவேலு தமது சொந்த லீவிலேயே இந்தியா சென்று மகாத்மா காந்தியின் கல்வி முறையான வர்தா கல்வி முறையைப் பயின்றார். தொழிற்கல்வி முறையின் சிறப்பையும் அதன் முக்கியத்துவத்தையும் உணர்ந்து கொண்டதோடு இந்தியாவில் உள்ள தயாள்பாக், அரவிந்தர் ஆச்சிரமம் ஆகிய நிறுவனங்களைப் பார்வையிட்டார்.

இலங்கையிலே கிளிநொச்சியில் குருகுலக்கல்வி முறையில் குழந்தைகள் வளர்ந்து கல்வி பயின்றால் நல்லதோர் சமுதாயத்தை உருவாக்கலாம் என்ற பேரெண்ணம் ஏற்பட்டது. வர்தா கல்வி முறையில் பயிற்சி பெற்று இலங்கை வந்து கரைச்சிச் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் குருகுலத்தைத் தாபித்தார். என்ன திறமையில்லை

எங்கள் அப்புஜீயிடம் என்று எல்லோரும் வியக்கத்தக்க முறையிலே சேவையாற்றினர். சிக்கன வாழ்விற்குச் சிறப்புடன் வழிகாட்டியவர். முயன்றால் வெற்றியுண்டு என்று வெற்றிப் பாதைக்கு வித்திட்ட முத்தமிழ் வித்தகர் அப்புஜீ அவர்கள்.

அல்லலுறும் குழந்தைகளுக்கு எல்லாம் ஆதரவு நல்கி வளர்த்து வாழ்வளிப்பதே இதன் குறிக்கோளாக அமைந்தது.

"தனியொருவனுக்கு உணவில்லையெனில்
இந்த ஜகத்தினை அழித்திடுவோம்"

என்ற பாரதியார் கூற்றிற்கேற்ப எத்தனையோ ஏழைச் சிறார்களின் வயிற்றுப் பசிக்கு உணவிட்ட உத்தமர் அப்புஜீ அவர்கள். வறிய சமுதாயமே தோன்றக்கூடாது. உழைப்பினால் உயரலாம் என்ற கொள்கைகளைக் கருத்திற் கொண்டு வழிகாட்டியவர். குருகுலத்தில் வளரும் குழந்தைகள் கல்வி பயில்வதோடு பல்வேறு தரப்பட்ட தொழில்களில் பயிற்சி பெறும் வண்ணம் பலவகைப்பட்ட தொழிற்கூடங்களை அமைத்தார்.

தொழில்மூலம் கல்வி பயிலும் முறையைச் செயற்படுத்தி மாணவரின் கல்வியிலே ஒரு புரட்சியை ஏற்படுத்துமுகமாக கிளி / இந்து மகா வித்தியாலயத்தில் பரீட்சார்த்தமாக தொழிற் கல்வியைச் செயற்படுத்த முனைந்தார். அரசாங்கங்களின் மாற்றங்களால் அப்புஜீ அவர்களின் எண்ணம் கைகூடாமல் போயிற்று. இருந்தும் மாணவரின் கல்வியில் எத்தனை அக்கறை கொண்டார் என்றும் கல்விக் கொள்கையில் ஒரு புரட்சியை ஏற்படுத்த முனைந்தார் என்பதும் புலனாகிறது.

குழந்தைப் பருவத்திலிருந்தே சைவப் பண்புகளும் சைவாசார அனுஷ்டானங்களில் நிறைந்தவர்களாக வளர வேண்டுமென்பதற்காகவே குருகுலத்திலே சர்வ சக்திபீடம் ஒன்றை அமைத்தார். குருகுலத்தின் வளர்ச்சிக்கான பணியோடு நிற்காது சமுதாயத்தின் நல் வாழ்விற்காகப் பலதிறப்பட்ட சேவைகள் ஆற்றியுள்ளார்.

அவரின் இலட்சியப் பாதையிலே வாழ்வோமாக!
அவர் புகழ் என்றும் ஓங்குவதாக !!

**செ. நடராசா,** செயலாளர், கரைச்சி சைவ
வித்தியாவிருத்திச் சங்கம், குருகுலம்.

# லோபி

சங்கரராம் பிறக்கும் போதே பணம் புரளும் குடும்பத்திற் பிறந்தான். அக் குடும்பத்தில் பரம்பரையாகவே தரும சிந்தனை என்பது கிடையாது. யாரை வஞ்சித்தும் பணம் பெருக்க வேண்டும் என்பதுதான் அக் குடும்பத்தின் குறிக்கோள். அக் குடும்பத்திலுள்ளோர் அத்தனை பேரும் இரண்டு விஷயங்களில் மிக ஒற்றுமை யுடையவராய்க் காணப்பட்டனர்.

ஒன்று: எப்படியாகுலும் தங்களிடமுள்ள பணம் பெருகிக் கொண்டு செல்ல வேண்டும் என்பது.

அடுத்தது: தான தருமங்களுக்கோ பொது விடயங்களுக்கோ பணத்தைச் செலவு செய்யக்கூடாது என்பது.

இந்த லோபித்தனத்தில் சங்கரராம் உச்சநிலை அடைந்தான். 'எச்சில் கையால் காகம் துரத்தாதவன்' என்று அவ்வூர் மக்கள் பேசிக் கொண்டார்கள். எச்சில் கையால் காகம் துரத்திளுல் கையில் ஒட்டியிருக்கும் சோறு வீணுய்ப் போய்விடும்; அதனுல் எச்சில் கையால் காகம் துரத்தாதவன் என்ற நிலைமைக்கு அவனுடைய லோபித்தனம் உயர்ந்து நின்றது. எத்தனையோ முடிமன்னர்களும் கோடீஸ்வரர்களும் இப் பூவுலகைவிட்டு மறைந்து போகக் கண்டும் தான் சாசுவதமாக இங்குதான் வாழ்வதாக எண்ணினுன், சங்கரராம். அடுத்த உலகைப் பற்றிச் சிந்திக்க பொருட் பற்று விடவில்லை.

எல்லோருக்கும் மரணம் வருவது போலவே சங்கரராமுக்கும் மரணம் ஏற்பட்டது. சங்கரராம் நரக உலகத்தில் கொண்டு சென்று தள்ளப்பட்டான். உடல் முழுவதும் நரக வேதனை அனுபவித்தது. ஆனுல் அவனுடைய வலது கைச் சுட்டுவிரல் மாத்திரம் சுவர்க்கம்

அனுபவித்தது. இந்த மர்மம் அவனுக்குப் பெரும் புதிராக இருந்தது. இந்தப் புதுமையை நினைந்து நினைந்தே நரக வேதனையை மறந்திருக்கத் தலைப்பட்டான். இந்தப் புதிருக்கு விளக்கங் காணத் தலைப்பட்டான்.

ஒருநாள் எமதர்மன் நரகலோக வாசிகளைப் பார்க்க வந்திருந்தான். எமதர்மனைத் தலைநிமிர்ந்து பார்க்கவே பலர் அஞ்சினர். சங்கரராம் மனந் துணிந்து "ஐயா! எனக்கொரு சந்தேகம். என்னுடைய உடல் முழுவதுமே நரகத் துன்பம் அனுபவிக்கின்றது. இந்தச் சுட்டுவிரல் மாத்திரம் சுவர்க்கம் அனுபவிக்கின்றது. காரணம் என்ன?" என வினவினான். "அந்தச் சுட்டு விரலால் ஏதாவது ஒரு நன்மை செய்திருப்பாய். ஆனபடியால்தான் அது சுவர்க்கம் அனுபவிக்கிறது!" என்று கூறினான், எமதர்மன்.

"ஐயா! எங்கள் குடும்பத்திலேயே தர்மம், நன்மை, இரக்கம் என்ற சொற்களை நாங்கள் கேள்விப்பட்டதில்லை. எங்கள் குடும்பத்தவர்கள் அத்தனை பேரையும் இங்கு காண்கின்றபோது எனக்கு நரகத் துன்பமே பெரிதாகத் தெரியவில்லை. பூவுலகத்தில் எவ்வளவு ஒற்றுமையாக வாழ்ந்தோமோ அவ்வளவு ஒற்றுமையாக அத்தனை பேரும் இங்கு வந்துள்ளோம். இப்படிப்பட்ட குடும்பத்திலே தோன்றிய நான் என்ன நன்மையைச் செய்துவிட முடியும்? எச்சில் கையால் காகம் துரத்தாதவன் என்று எத்தனையோ பேர் என் காதில் விழப் பேசியிருக்கின்றார்கள். அப்படிப்பட்டவன் என்ன நன்மையைச் செய்திருக்க முடியும்?"

"நீ ஒரு நன்மை செய்திருக்கிறாய்! அது எனக்குத் தெரியும். நான் சொல்வதைக் கேள். ஒருநாள் மத்தியானம் வீட்டில் நல்ல விருந்துண்டுவிட்டு நீ வெளித் திண்ணையில் உட்கார்ந்திருந்தாய். அப்போ ஒரு ஏழை ஒட்டி உலர்ந்த வயிற்றுடன் பசி என்று கூறிக்கொண்டு வந்தான். அன்று நீ அவனுக்கு ஒரு நல்ல செயல் செய்தாய். அவனை அன்புடன் அழைத்து, 'அப்பா! இன்று நாங்கள் எல்லாரும் சாப்பிட்டு விட்டோம். அதோ அடுத்த வீட்டுக்குப் போ! அங்கே இன்று திவசம். நல்லாய்ச் சாப்பிடலாம்' என்று அந்த வீட்டைச் சுட்டிக் காட்டினாய். அந்த ஒரு நல்ல செயலுக்காகத்தான் உனது விரல் சுவர்க்கத்தை அனுபவிக்கிறது." என்று கூறினான் எமதர்மன்.

"இவ்வளவு இலகுவில் சுவர்க்கத்தை அனுபவிக்கலாம் என்பதை அறியாது வாழ்ந்தேனே, ஐயா! என்மீது மன மிரங்கி இன்னொரு முறை பூவுலகத்திற்கு அனுப்பினால் முறை யாக நல்ல தான தருமங்கள் செய்து சுவர்க்கத்தை அனு பவிப்பேன். இனிமேல் நல்லவனாக நடந்துகொள்வேன். கருணை செய்ய வேண்டும்" என்று கேட்டுக்கொண்டான் சங்கரராம்.

"இங்கே வந்தவர்கள் பின்பு திரும்பிச் செல்லும் வழக்கம் இல்லை. அனுபவிக்க வேண்டியன எல்லாம் அனுபவித்துத் தான் ஆக வேண்டும்." என்று கூறினான் எமதருமன். எம தருமன் வரும்போதெல்லாம் முறையிடத் தொடங்கினான் சங்கரராம். அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்பர். எமதருமனுக்குச் சிறிது இரக்கம் கண்டது. அதனால் தனது தர்மத்தினின்று கீழ் இறங்கினான். சங்கரராமின் வேண்டுகோளுக்குச் சம்மதித்தான்.

'தான் தேடிவைத்த அதே பொருளுடைய் குடும்பத்தில் பிறக்க வேண்டும்; இந்த எண்ணங்களுடன் பிறக்க வேண் டும்' என்று கேட்டுக்கொண்டான் சங்கரராம். அப்படியே எல்லாம் நிகழ்ந்தன. சங்கரராம் மறுபிறவி எடுத்து ஆண்டு கள் பலவாகிவிட்டன. பழைய லோபித்தனமே அவன் உள் ளத்தை மூடியிருந்தது. ஒருநாள் தற்செயலாக ஒரு பிச்சைக் காரன் "பசி! பசி!!" என்று கதறிக்கொண்டு வந்தான். "தாகத்திற்காவது தண்ணீர் ஊற்றுங்கள்!" என்று கத்தி னான். வீட்டுத் திண்ணையில் ஏப்பம் விட்டுக்கொண்டிருந்த சங்கரராமுக்குப் பழைய நினைவு உண்டானது. "இங்கே வா, அப்பா!" என்று அன்புடன் அழைத்து, "இருந்த தண்ணீ ரும் முடிந்துவிட்டது. அதோ அந்த வீட்டுக்குப் போனால் தண்ணீரும் தருவார்கள், சாப்பாடும் தருவார்கள்." என்று தனது உடம்பு முழுவதையும் தூக்கிப் பாய்ந்து காட்டினான். முன்பு விரலால் சுட்டிக்காட்டியபடியால் விரல் சுவர்க்கம் அடைந்தது. இப்போ உடம்பு முழுவதையுமே தூக்கிக் காட்டியபடியினால் உடம்பு முழுவதுமே சுவர்க்கம் அடைந்து விட்டதாகச் சங்கரராம் கருதினான். உலோபத்தன்மை இப்படிப்பட்டது.

# பிரபு

கருணமூர்த்திக்கு பொதுமக்கள் வைத்த பெயர் கஞ்சப் பிரபு என்பது. கருணமூர்த்தி இல்லாத இடத்தில் எவராவது அவரைக் கருணமூர்த்தி என்று அழைத்ததே கிடையாது. பெரும்பாலோர் கஞ்சன் என்றே அழைப்பர். ஒரு சிலர் பிரபு என்றும் அழைப்பர். அவர்கள் பிரபு என்று அழைத்தாலும் அவர்கள் கூறும் கருத்து கஞ்சன் என்பதையே தெளியவைக்கும்.

கருணமூர்த்தி திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். மிகமிகச் சாதாரண குடும்பத்தில் பிறந்தவர். வியாபார நோக்கமாக அலகபாத் போய்ச் சேர்ந்தார். பெட்டிக்கடையில் ஆரம்பித்தவர் இன்று பனாரிஸ் சில்க் ஸ்டோருக்குச் சொந்தக்காரராக விளங்குகிறார். அவருடைய வாழ்க்கையின் ஒரே குறிக்கோள் பணம் சேர்த்தலாகும். தேடிய பணத்தை எவ்வழியிலாவது அனுபவிக்கும் பாக்கியம் அவருக்கு இல்லை.

மனைவியும் அவருமே. குழந்தைச் செல்வமும் இல்லை. அவருக்கு அதைப் பற்றிக் கவலை இல்லை. மனைவிக்கோ தன் பெயர்கூற ஒரு குழந்தை இல்லையே என்ற கவலை. குழந்தை வரம் விரும்பி நோன்புகள் நோற்றாள். யாத்திரை செய்ய விரும்பினாள். கருணமூர்த்தி காசுச் செலவைக் கருதி யாத்திரையைப் பின்போட்டுக் கொண்டே வந்தார். வயது நிற்குமா? கருணமூர்த்திக்கு 55 வயதைத் தாண்டிவிட்டது. மனைவிக்கும் 50 வயது கடந்துவிட்டது. மனைவி கடைசிக் காலத்திலாவது யாத்திரை செய்து வாழ்வைப் புனிதப் படுத்த வேண்டுமென்று

(147-ம் பக்கம் பார்க்க)

**உபதேசம்**

**இதை திண்ணிற் பதித்துக் கொள்: இந்தியா உலகிற்கு அளிக்கும் செய்தியாவது எக்காலத்தும் 'ஆன்மா' இயற்கைக்காக இருப்பதன்று, ஆனால் ஆன்மாவுக்காக இயற்கை உள்ளது என்பதே.**
**சுவாமி விவேகானந்தர்.**

# குரங்குத் தாயன்பு

ஜேர்மனி தேசத்திலே ஓர் ஆராய்ச்சிச் சாலை. ஆராய்ச்சிச் சாலையிலே ஒரு கண்ணாடிச் சாடி. சாடியினுள்ளே இரு குரங்குகள். ஒன்று தாய்க் குரங்கு; மற்றது குட்டி. குட்டி தாய்க் குரங்கின் மார்பைக் கட்டிப்பிடித்துக் கொண்டிருந்தது.

கண்ணாடிச் சாடிக்குள்ளே இருந்து குரங்கு வேடிக்கை பார்த்தது. குட்டிக்குச் சிறிது பயமும் உண்டானது. குரங்கின் கால் குளிர்ந்தது. குரங்கின் வாயிலும் சிறிது குளிர் தொட்டது. எழுந்து குனிந்து பார்த்தது. எங்கிருந்தோ தண்ணீர் பெருகிக்கொண்டிருந்தது. தண்ணீர் வர வர உயர்ந்துகொண்டே வந்தது. தண்ணீர் உயர்ந்து வருவதைக் குரங்கு உணர்ந்து கொண்டது. ஆனால் எங்கிருந்து தண்ணீர் வருகிறது என்பதை மாத்திரம் அதனால் அறிய முடியவில்லை.

சாடியினுள்ளே உலாவிப் பார்த்தது. கையை வைத்துப் பார்த்தது. தாவிப் பார்த்தது. தடவிப் பார்த்தது. எதுவுமே புலப்படவில்லை. இந்த ஆராய்ச்சியில் குரங்கு ஈடுபட்டிருக்கும் போதே அதன் மார்பளவுக்குத் தண்ணீர் உயர்ந்து விட்டது. குட்டியின் மூக்கிற்குக் கிட்ட வந்துவிட்டது. குட்டி மூச்சுத் திணறியது. குரங்கு நிமிர்ந்து கால் விரலில் நின்றது. தண்ணீர் கூடிக்கொண்டே வந்தது. குட்டி படும் அவஸ்தையைத் தாய் உணர்ந்தது. குட்டியைத் தூக்கித் தோள் மேலே வைத்துக்கொண்டது. குட்டி சந்தோஷமாகத் தாயின் கழுத்தைக் கட்டிக்

**விவேகானந்தரின் வீரமொழி**

இரக்கத்தால் பிறருக்கு நன்மை செய்வது நன்றே. ஆனால் ஈசனது அம்சமென எல்லா உயிர்களுக்கும் பணி செய்தல் மிகவும் நன்று.

கொண்டே இருந்தது. தாயன்பில் சொக்கி குட்டி தன்னை மறந்து இருந்தது.

தண்ணீர் படிப்படியே உயர்ந்து வந்தது; குரங்கின் மூக்கை எட்டியது. குரங்கு நிமிர்ந்து நின்று வாயைத் திறந்தது. தண்ணீரே வாய்க்குள் சென்று விட்டது. ஒருவாறு சமாளித்துக் கொண்டு நிமிர்ந்து நின்றது. மிகச் சில விநாடிகள் சென்றன. மறுமுறையும் குரங்கின் மூக்கைத் தண்ணீர் எட்டியது. குரங்கு மூச்சுவிடத் திணறியது; தன்னுடைய உயிருக்கு அபாயம் என்பதை உணர்ந்தது. ஒரு கணப்பொழுதும் வாழமுடியாத நிலை ஏற்பட்டு விட்டதென்பதை உணர்ந்தது. இனி ஒரு கணமேனும் குட்டியையும் காப்பாற்ற முடியாத நிலை வந்து விட்டதென்பதை அது அறிந்து கொண்டது.

புத்திர வாத்சல்யம் எங்கோ ஓடி ஒளிந்து கொண்டது. குரங்குக்கு தன் உயிரைப் பாதுகாக்க வேண்டும் என்ற கடைசி நினைவு உண்டானது. கடைசி முறையாக தண்ணீருள் அமிழ்ந்து மூச்சுத் திணறியது. தோளின் மேலிருந்த குட்டியைக் கையால் எடுத்து நீருள் அமிழ்த்தியது. குட்டி பரக்கப் பரக்க விழித்தது. தண்ணீருள் அமிழ்ந்தபடியினால் சத்தமும் போட முடியவில்லை! தண்ணீர் அடியிலே சென்ற குட்டியின் மேல் பெருமையோடு ஏறி நின்று கொண்டது குரங்கு.

தன்னுயிர்க்கு ஏற்பட்ட ஆபத்து நீங்கி விட்டதை உணர்ந்தது குரங்கு. குட்டியைப் பற்றி அது கவலைப்படவில்லை. தன்னுயிர்க்கு ஆபத்தேற்படாதிருக்கும் போதுதான் புத்திர வாத்சல்யம். இது எல்லா உயிர்களுக்கும் பொதுவே. எல்லாப் பிராணிகளும் பொதுவாகத் தமது உயிரையே மேலாகக் கருதுகின்றன. இது பொது நியதி. பக்தி உள்ள மனிதன் மாத்திரமே தன்னிலும் உயர்ந்த ஒரு பொருள் இருப்பதை உணர முடியும். அவன் அதற்காகத் தன் உயிரையே தியாகம் செய்கின்றான். கண்ணப்பரின் தியாகம் இத்தகையது.

144-ம் பக்கத் தொடர்ச்சி ... ... ...
விரும்பினுள். அடிக்கடி கருணாமூர்த்தியிடம் நினைவூட்டுவாள். அவரோ கடையில் வேலை என்று கூறிவிடுவார்.

தைப்பொங்கல் நெருங்கிக்கொண்டிருந்தது. அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் திரிவேணிசங்கம யாத்திரை புறப்பட்டுக்கொண்டிருந்தனர். மனைவி தான் மற்றவர்களோடு சென்று வருவதாகக் கூறினுள். செலவுக்குப் பயந்து கருணாமூர்த்தி சம்மதிக்கவில்லை.

மனைவியைத் திருப்திப்படுத்துவதற்காகப் புதிய வழி ஒன்றைக் கண்டுபிடித்தார், கருணாமூர்த்தி. ''எங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் ஓடுகிற கங்கைதானே அங்கும் ஓடுகிறது. அதற்காக இவ்வளவு பணமும் நேரமும் செலவு செய்து போவதா? நாங்கள் இருவருமே காசிவிசுவநாதர் கோயிலுக்கு பொங்கல் அன்று செல்வோம்.'' என்று கூறினுர். அவ்வளவிலாவது மனைவி திருப்திப்பட்டுக்கொண்டாள்.

பொங்கல் நாள் அதிகாலை 4 மணி. 3 மைல் தூரம் நடந்து கங்கைப் படித்துறை சென்று சேர்ந்தார்கள். செல்லும் போது ஒரு செப்புச் சல்லியாவது கொண்டு செல்லவில்லை. கொஞ்சப் பொரி மாத்திரம் ஒரு முடிச்சில் இருந்தது. படித்துறை எங்கும் ஒரே சனக் கூட்டம். புரோகிதர்களின் தட்சணை ஒரு பக்கம். கருணாமூர்த்தி பெரிய புத்திசாலி அல்லவா? புரோகிதர்களிடம் அகப்பட்டால் அவர்கள் தன்னை லேசில் விடமாட்டார்கள் என்பது அவருக்குத் தெரியும். ஆதலால் ஒருவரும் இல்லாத படித்துறையை நாடி வெகுதூரம் சென்றுர். அது 'அரிச்சந்திரன் காட்' என்று அழைக்கப்படும் அரிச்சந்திரன் காவல் காத்த சுடுகாடாகும். பிரேதம் ஒரு பக்கத்தில் எரிந்து கொண்டிருக்கிறது.

இதுதான் நல்ல அமைதியான இடம் என்று மனைவிக்குக் கூறிக்கொண்டே கங்கையில் இறங்கினுர். திடீரென ஒரு புரோகிதர் தோன்றினுர். ''இன்று உத்தராயண புண்ணிய

(தொடரும்)

# வேதாந்த விளக்கின்... கடைசிச் சுடரும் அணைந்தது

( ஆத்மஜோதி நா. முத்தையா )

பாரத பூமி பல மகான்களையும், பல ஜீவன் முத்தர்களையும், பல சித்தர்களையும் கண்ட நாடு. இந்தியாவிலுள்ள பல ஆதீனங்கள் தம்மைத் திருக்கைலாய பரம்பரை என்று சொல்லிக்கொள்வது போல வேதாந்த நெறியிலுள்ளாருக்கும் பலவிதமான பரம்பரைகள் உண்டு. இங்ஙனம் நிலைத்திருந்த ஒரு பரம்பரையிலிருந்து மூன்று மகான்கள் ஈழத்திற்கு வந்து சேர்ந்தனர். அவர்கள் சுவாமி சின்மயானந்தர், சுவாமி முத்தியானந்தர், சுவாமி நிரஞ்சனானந்தர் என்று அழைக்கப் பெற்றனர். அவருள் முத்தியானந்தரே கடையிற் சுவாமிகள் எனப் பெயர் பெற்றார். சுவாமி நிரஞ்சனானந்தர் கீரிமலையிற் பரமகுரு சுவாமிகள் என்ற பெயரோடிருந்து குழந்தைவேற் சுவாமிகளுக்கு உற்ற குருவாய் வாய்த்தவர்.

**உபதேசம்**

ஆன்மீக அடிப்படை இல்லையாயின், மேற்றிசை நாகரீகம் முழுமையும் அடுத்த ஐம்பது ஆண்டுகளில் துண்டு துண்டாக நொறுங்கி விடும். மனித வர்க்கத்தினரை வாள்வலி கொண்டு அடக்க முயல்வது நம்பிக்கைக்கு வழியற்றது; முற்றிலும் பயனற்றது.

— சுவாமி விவேகானந்தர்

சுவாமி சின்மயானந்தர் பரம்பரையில் வந்தவர்கள் சாஜன் சுவாமி பரம்பரையினர். இப் பரம்பரையில் வந்தவர்களே கந்தர்மடத்து வேதாந்த மடத்தைச் சேர்ந்தவர்கள், சாஜன் சுவாமிகளுடைய உத்தம சீடர் மகாதேவ சுவாமிகள். இவருடைய சீடர்களில் ஒருவர்தான் சமீபத்தில் கிளிநொச்சியைச் சேர்ந்த மகாதேவ ஆச்சிரமத்தில் சமாதி அடைந்த வடிவேற் சுவாமிகள் ஆவர். சுவாமிகளுடைய பூர்வாச்சிரமப் பிறப்பிடம் இணுவிலாகும்.

இணுவிலும் சன்னுசியார், அம்பிகைபாகர் போன்ற பெரியார்களைக் கண்ட ஊராகும். சங்கீத மணம் இம்மண்ணுக்கு உண்டென்றால் அது மிகையாகாது. இத்தகைய ஊரிலே பிறந்த வடிவேற் சுவாமிகளுக்குப் பெற்றோரிட்ட பெயர் வடிவேல் என்பதாகும்.

பாடசாலையில் ஆரம்பக் கல்வியை முடித்துக் கொண்ட வடிவேலர் தந்தையாரின் அறிவுரைப்படி மகாதேவ சுவாமிகளிடம் வேதாந்த பாடங் கற்றுக் கொண்டதோடு மகாதேவ சுவாமிகளின் உண்மையான சீடனுமானார். கஷாயம் மேற்கொண்ட பின் மக்களால் வடிவேற் சுவாமிகள் என்றே அழைக்கப்பட்டார்.

சுவாமிகளிடம் பல திறமைகள் காணப்பட்டன. பண்ணோடு திருமுறை ஓதுதல். மக்களைக் கவரும் வகையில் சங்கீத கதாப்பிரசங்கம் செய்தல். சுவாமிகள் இளமையிலிருந்தே சிறந்த கமக்காரராக விளங்கினார்கள் சந்நியாசி என்றாலும் தான் உழைத்து அந்த உழைப்பிலே உண்ண வேண்டும் என்ற கொள்கை உடையவர். ''ஒரு சந்நியாசி உணவுக்கு பிறருடைய கையை எதிர்பார்த்திருந்தால் அவரால் பிறருக்கு எப்படி உதவிசெய்ய முடியும்?'' என்று அடிக்கடி கேட்பார்கள்.

சுவாமி விவேகானந்தருடைய காலத்திலே எம். ஏ., பி. எச். டி. பட்டம் பெற்ற ஒரு இளைஞர் இராமகிருஷ்ண மடத்தில் துறவியாகச் சென்றிருந்தார். சுவாமி விவேகானந்தர் அந்த இளைஞரிடம் முதல் கேட்ட கேள்வி ''உனக்கு சமைக்கத் தெரியுமா?'' என்பது தான். இளைஞர் ''இல்லை'' என்றார். உடனே சுவாமிகள் ''உனக்குச் சமைக்கத் தெரியாவிட்டால் உனது சாப்பாட்டிற்கு வேறு யாராவது ஒருவருடைய கையைத்தான் நீ எதிர்பார்க்க வேண்டிவரும். அப்படியானால் நீ பிறருக்குச் சேவை செய்வதும் முடியாத காரியம். ஆகவே ஒரு மாதகால அவகாசம் தருகிறேன். அதற்கிடையில் சமையல் பழகிக் கொண்டு வருக'' என்று திருப்பி அனுப்பிவிட்டார். இளைஞர் ஒரு மாதம் முடிய வந்தார். அவருக்கு முதலில் கொடுக்கப்பட்ட வேலை மூன்று மாதங்களுக்குச் சமையல் செய்ய வேண்டும் என்பது தான். இச் செய்தியை வடிவேற் சுவாமிகள் அடிக்கடி தமது பேச்சுக்களிலே குறிப்பிடுவார்கள்.

தவில் வித்துவான் தெட்சணாமூர்த்திக்கு முதன்முதல் பாடம் ஆரம்பித்து வைத்தவர் வடிவேற் சுவாமிகள் ஆவர்.

சுவாமிகளுடைய கைராசிதான் பிற்காலத்தில் தெட்சணா மூர்த்தி தவில் வித்துவானாக விளங்குவதற்குக் காரணமாயிருந்தது என்று அன்பர்கள் பேசிக்கொண்டார்கள்.

இணுவிலில் தற்போது கல்விமான்களாக விளங்கும் பலருக்குச் சுவாமிகள் திருமுறையும் வேதாந்த பாடமும் கற்றுக் கொடுத்துள்ளார்கள்.

கிளிநொச்சிப் பகுதியில் மத மாற்றம் மும்முரமாக நடைபெற்ற காலத்தில் சுவாமிகள் கிளிநொச்சிக்கு வந்து குடியேறினார்கள். சுவாமிகளுடைய வருகையினால் ஓரளவு மத மாற்ற வேகம் தணிந்ததென்றே கூறவேண்டும்.

கரைச்சிச் சைவவித்தியா விருத்திச் சங்கமும் கிளிநொச்சி திருநெறிக் கழகமும் சமயப் பணியிலும் சமூகப் பணியிலும் மும்முரமாக ஈடுபட்டிருந்த காலத்தில் சுவாமிகளுடைய சேவை மிகமிக அவசியமாகக் காணப்பட்டது. தளர்ந்த வயதிலும் சுவாமிகள் சமயப் பணியையும் சமூகப் பணியையும் மேற்கொண்டு தளராது உற்சாகமாகச் செய்தார்கள்.

ஆச்சிரமத்தை நாடி வந்தோருக்கு இருக்க இடமும் உண்ண உணவும் கொடுத்து அவர்களைச் சமய சாதனைகளில் ஈடுபடுத்தியதோடு சமய, சமூகப் பணிகளிலும் அவர்களை ஈடுபடச் செய்தார்கள். கிளிநொச்சியைப் பொறுத்த வரையில் சுவாமிகளுடைய மறைவு பெரும் இழப்பு என்றே கூறவேண்டும்.

ஆறுதல் அற்றோருக்கு ஆறுதல் கொடுக்கும் ஒரு பெரும் மகானாகச் சுவாமிகள் விளங்கினார்கள். சுவாமிகளை முன்னிட்டே ஆச்சிரமத்தில் பல சமய நிகழ்ச்சிகள் நிகழ்ந்து வந்ததை யாவரும் அறிவர். மகாதேவ ஆச்சிரமத்திற்கு நேர் எதிர்ப்பக்கமாக குருகுலம் அமைந்ததும் ஒரு நல்ல வாய்ப்பு என்றே கருதவேண்டும். இன்று 120 அனாதைச் சிறுவர் சிறுமிகளைக் கொண்டு விளங்குவது குருகுலம். குருகுலச் சிறுவர் சிறுமிகளுடைய கல்வி, சமயம், ஒழுக்கம் போன்றவற்றுக்குச் சுவாமிகள் உற்ற துணையாக விளங்கினார்கள்.

சாதுக்களுடைய தரிசனத்தைப் பற்றி பகவான் ரமண மகரிஷிகள் பாடிய ஒரு பாடலை இச் சந்தர்ப்பத்தில் நினைவு கூருவோமாக.

„தாபந் தண் சந்திரனால் தைனிய கற்பகத்தால்
பாபந்தான் கங்கையாற் பாறுமே — தாபமுதல்
இம் மூன்றும் ஏகும் இணையில் சாதுக்கள்
அம்மா தரிசனத்தால் தான்."



ஆத்மஜோதி

# சக்தி வணக்கம்

**திரு. க. சி. குலரத்தினம்**

"ஒன்றாகி யைந் தொழிற்கு மைந்துவித முற்றமிரு
ணின்றான் பொற் பாதநினைவாம்" — சைவசமய நெறி.

சிவபெருமானோடும் வேற்றுமையின்றி ஒரு முதலாகி, பஞ்சகிருத்தியத்தின் பொருட்டுப் பஞ்சசத்தி பேதங்களைப் பொருத்தி, சர்வான்மாக்களிடத்தும் வியாபித்து நின்ற சிவ சக்தியினுடைய பொலிவாகிய திருவடிகளைத் தியானிப்பாம்.

வெளியில் தெரியாத தேவி மகாகாளி உருவெடுத்து உலகைப் படைக்கின்றாள். இலக்குமியாக எழுந்தருளி வந்து உலகத்துக்கு வளத்தையும், செல்வத்தையும் கொடுக்கின்றாள். சரஸ்வதியின் திரு உருவத்திலிருந்து அறிவைக் கொடுக்கின்றாள்.

தேவனும் தேவியும் வாக்கும் அர்த்தமுமாக இருக்கின்றார்கள். தேவி ஓங்காரம் என்னும் கூட்டில் கிளிபோல் இருக்கிறாள். சர்வ சைதன்ய வடிவமாயும் ஆதிவித்தையாயும் தேவி நிலவுகின்றாள். அவள் எங்கள் புத்தியைத் தூண்டிக் கொண்டே இருக்கிறாள்.

பரப் பிரமத்தை ஒத்திருக்கும் மகாசக்தியைச் சண்டிகா தேவி என்று தந்திர நூல்கள் குறிப்பிடுகின்றன. தமிழ் நாட்டிலும், ஈழத் திருநாட்டிலும் தமிழர் சரஸ்வதி தேவி என்னும் நாமங்களையே வழிபடுகின்றார்கள். கல்வியாளர்கள், கலைஞர்கள், உழவர்கள், நெசவாளர் முதலானோர் நாமங்களையே நவராத்திரி நாயகி எனப் போற்றுகிறார்கள். சரஸ்வதியின் திருவருள் வாழ்வுக்கு இன்றியமையாதது எனக் கண்டு வணங்கி வருகிறார்கள்.

அறியாமை, மிருகத்தன்மை, மந்தபுத்தி, அசுரப் போக்கு முதலியவற்றிலிருந்து நம்மைக் காத்தருள் புரிபவள் தேவி. தேவி தாய்மையின் சொரூபமாயுள்ளவள். அஞ்ஞான இருளை நீக்கும் ஞானாம்பிகை அவளே. நவராத்திரி விரதமும் விழாவும் ஒன்பது நாட்களோடு முடிவதில்லை. அடுத்த

நாள் விஜயதசமி விழாவோடுதான் சக்திபூசை முடிவடைகிறது. பத்து நாட்களில் முடிவடைவதால் இவ் விழாவைத் தசரா எனவும் வழங்குவர்.

இந்த விழாவைச் சைவர், வைணவர் ஆகிய இருதிறத்தாரும் வித்தியாசம் பாராட்டாமல் கொண்டாடுகின்றார்கள். இந்திய முகமதியர்களும் இதனை முன்னர் கொண்டாடியதாக குலாம் ஹுசேன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். நவராத்திரி விழா எல்லோருக்கும் ஏற்றம் அளிக்கும் பெரு விழாவாகும். சுருங்கச் சொல்லில் அறியாமையை வென்று அறிவைப் பெறவும் தீமையை வென்று நன்மையைப் பெறவும் பெரு விழாவாக நடைபெற்று வருவது நவராத்திரி விழாவாகும்.

தாயாகிய ஞானம்பிகையைத் துர்க்கா பரமேஸ்வரி எனவும் வழங்குவர். அஞ்ஞானத்தின் பல வடிவங்களான அரக்கர்களை அழித்தவள் அவள். மது - கைடபவ வதத்துக்கு காரணமாயிருந்தவள் காளி. மகிடாசுரனை வென்றழித்தவள் மகாலட்சுமி, சும்பன் நிசும்பனை அழித்தவள் சரஸ்வதி.

நவராத்திரி நாயகி எல்லாம் வல்ல சக்தி. அவளின் தாயன்பு வீரமாகப் பரிணமித்து நம்மைக் காத்தருள் புரிகின்றது. அவள் துர்க்கா, லக்ஷ்மி, சரஸ்வதி என மூன்று வடிவமானவள். ''துர்க்கா, லக்ஷ்மி, சரஸ்வதிப் யோநம'' என்பது பூஜா மந்திரம்.

சரஸ்வதி வரமளிப்பவள். தாமரையில் இருப்பவள்; பாபங்களைப் போக்குபவள்; சுத்தமானவள்; எல்லாமாக இருப்பவள்; பிரகாச முள்ளவள்; வாக்குக்குத் தேவியாக இருப்பவள்; மங்களமாயிருப்பவள்; வித்தியாரூபிணியானவள்; தாயாக இருப்பவள்; கலையைத் தரிப்பவள்; வெண்மையான திருமுகமுள்ளவள்; அறம், பொருள், இன்பம், வீடு அளிப்பவள்.

''உலக மாதாவான சரசுவதியே! அண்டியவர்கள் கேட்கும் வரங்களை நல்கும் தேவீர்!! அடியேன் பத்தியுடன் அளித்த பூசையை ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும்!!!'' என்று பூசை முடிவில் கேட்டுக் கொள்ளலாம்.

# தேவியின் திருநாம அர்ச்சனை (108)*

(பரமகம்சதாசன்)

அம்ம ணீ ! ஜக தம்பி கே ! கரு
ணாக ரீ ! பர மேஸ்வரீ !
கண்ம ணீ ! ஜெய கௌரி, காங்கயி
கார்த்திகே ! திரி நேத்திரி !
தண்ம யீ ! உப சாந்தி னி ! சிவ
சாம்ப வீ ! ஏ காம்பரீ !
சின்ம யீ ! சுப சீலி, மாலினி,
தேவி, சௌந்தரி, ஓம்நமோ !

பத்ர காளி, துர்க் கா, பவானி,
பராசக் தீ ! பரி பாலினி !
சித்சொ ரூபிணி, சிம்ம வாகினி,
திவ்ய ராஜரா ஜேஸ்வரி !
வித்வ பூதணி, மீன லோசனி,
வீர மர்த்தனி, விமலினி,
சத்ய வாசனி, நித்ய கன்னி,
தயாப ரீ ! நம,ஓம் நமோ !

குண்ட லீ ! சந்த்ர மண்ட லீ ! இளங்
கோம ளீ ! இன்ப ஸ்யாம ளீ !
சண்டி கா, சா முண்டி, பைரவி
சாவித் ரீ ! ஜெப காயத்ரி !
அண்டர் நாயகி, ஆபத் பாந்தவி,
அமுத ஞானப யோத ரீ !
தொண்டர் சாதகி, தூய வானதி
சோம சேகரி, ஓம் நமோ !

சுத்த சக்தி, சுடர்க்கொ டீ ! திவ்ய
சுந்த ரீ, ஸ்ரீபு ரந்த ரீ !
வித்த கீ ! தெய்வ நர்த்த கீ ! ஜய
விஜயி, பாபவி நாசினி,

சித்த ரஞ்சனி, தெய்வ குஞ்சரி
தேவ தா, உமா, பார்வ தீ !
நித்ய வாணி, நிரஞ்ச னி ! மலை
நீலி, சங்கரி, ஓம் நமோ !

சந்த்ர மௌளி, சரஸ்வ தீ ! திவ்ய
சார தா ! ஐய பார தீ,
சுந்த ராங்கி, சுரநு தாவின்ன,
சோபி தா, சம்ப்ர பாவ தீ,
மந்த்ர ரூபிணி, மாப கவதி,
மாஹி ஷாசுர மர்த்த னீ,
தந்த்ர சாதனி, செஞ்ச டாதரி,
சர்வ தாரகி, ஓம் நமோ !

அஷ்ட லட்சுமி, அபய ஹஸ்தனி,
அமலி னீ ! செங் கமலினி
நிஷ்டை யோகினி, நிமல வாகினி
நிஷ்க ளங்கசர் யாசினி
துஷ்ட நிக்ரஹி தூய வைஷ்ணவி
ஜோதி வேணி, சுமங்கலீ !
சிஷ்ட ரட்சகி, ஸ்ரீவ ராகினி
சீத ளீ ! நம ஓம் நமோ !

பூர ணீ ! ஞான பூஷ ணீ ! வேத
போதி னீ ! தர்ம சாத னீ !
ஆர ணீ ! நவ சீர ணீ ! உல
காண்ட வீ ! உக்ர தாண்ட வீ !
கார ணீ ! சிவ காமி னீ ! ஜீவ
காரு ணீ ! ஜகன் மோகினி !
நார ணீ !பவ தார ணீ ! புவி
நாய கீ ! நம ஓம் நமோ !

---

• தெல்லிப்பளை துர்க்கை அம்மன் தேவஸ்தான உற்சவ காலத்தை அனுசரித்து வெளியிடப்படுகின்றது.

## நினைவுகள்

### ஆடி மாதம்

17-7-90 செய்வாய் - ஆடிப் பிறப்பு, கார்த்திகை விரதம்.
18-7-90 புதன் - ஏகாதசி விரதம்
19-7-90 வியாழன் - பிரதோஷ விரதம்
20-7-90 வெள்ளி - மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் தேர்.
21-7-90 சனி - ஆடி அமாவாசை விரதம், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் தீர்த்தம்.
25-7-90 புதன் - நாகசதுர்த்தி விரதம், ஆடிப் பூரம்.
27-7-90 வெள்ளி - ஷஷ்டி விரதம், நல்லூர்க் கந்தசுவாமி கோவில் கொடியேற்றம்.
28-7-90 சனி - இணுவில் காரைக்கால் சிவன் கோவில் கொடியேற்றம்.
2-8-90 வியாழன் - ஏகாதசி விரதம்.
3-8-90 வெள்ளி - வரலக்ஷ்மி விரதம்.
4-8-90 சனி - சனிப் பிரதோஷ விரதம்.
5-8-90 ஞாயிறு - பட்டினத்தடிகள் குருபூஜை, இணுவில் காரைக்கால் சிவன் கோவில் தேர்.
6-8-90 திங்கள் - பூரணை விரதம், இணுவில் காரைக்கால் சிவன் கோவில் தீர்த்தம்.
8-8-90 புதன் - கோணேஸ்வரம் கொடியேற்றம்.
10-8-90 வெள்ளி - சங்கடஹர கணபதி விரதம்.
12-8-90 ஞாயிறு - திருச்செந்தூர், ஈழத்துச் செந்தூர் முருகன் கொடியேற்றம்.
14-8-90 செவ்வாய் - கார்த்திகை விரதம்
16-8-90 வியாழன் - ஏகாதசி விரதம்.

### ஆவணி மாதம்

17-8-90 வெள்ளி - ஆவணி மாதப் பிறப்பு.
18-8-90 சனி - சனிப் பிரதோஷ விரதம்.
19-8-90 ஞாயிறு - நல்லூர்க் கந்தசுவாமி கோவில் தேர்.
20-8-90 திங்கள் - நல்லூர்க் கந்தசுவாமி கோவில் தீர்த்தம், அமாவாசை விரதம், திருச்செந்தூர், ஈழத்துச் செந்தூர் தேர்.
21-8-90 செவ்வாய் - திருச்செந்தூர், ஈழத்துச் செந்தூர் தீர்த்தம்.
23-8-90 வியாழன் - தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் கொடியேற்றம்

24-8-90 வெள்ளி - விநாயக சதுர்த்தி விரதம்.
26-8-90 ஞாயிறு - ஷஷ்டி விரதம்.
2-9-90 ஞாயிறு - பிரதோஷ விரதம், ஆவணி ஓணம், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் தேர்.
3-9-90 திங்கள் - முன்னேஸ்வரம் தேர், தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானம் தீர்த்தம்.
4-9-90 செவ்வாய் - பூரணை விரதம், உமாமகேஸ்வர விரதம், முன்னேஸ்வரம் தீர்த்தம்.
10-9-90 திங்கள் - கார்த்திகை விரதம்.
15-9-90 சனி - ஏகாதசி விரதம்.
16-9-90 ஞாயிறு - பிரதோஷ விரதம்.

## புரட்டாதி மாதம்

17-9-90 திங்கள்-புரட்டாதி மாதப்பிறப்பு, கேதாரேஸ்வர விரதம்
18-9-90 செவ்வாய் - அமாவாசை விரதம்.
19-9-90 புதன் - நவராத்திரி விரத ஆரம்பம்
22-9-90 சனி - சதுர்த்தி விரதம், திருப்பதி கொடியேற்றம்.
24-9-90 திங்கள் - ஷஷ்டி விரதம்.
26-9-90 புதன் - சரஸ்வதி பூஜாரம்பம், கேதார கௌரி விரதாரம்பம்.
28-9-90 வெள்ளி - மஹாநவமி விரதம்.
29-9-90 சனி - விஜயதசமி.
30-9-90 ஞாயிறு - ஏகாதசி விரதம், திருப்பதி தேர்.
1-10-90 திங்கள் - திருப்பதி தீர்த்தம்.
2-10-90 செவ்வாய் - பிரதோஷ விரதம்.
3-10-90 புதன் - கடையிற் சுவாமிகள் குருபூஜை.
4-10-90 வியாழன் - பூரணை விரதம்.
7-10-90 ஞாயிறு - கார்த்திகை விரதம்.
14-10-90 ஞாயிறு - ஏகாதசி விரதம்.
16-10-90 செவ்வாய் - பிரதோஷ விரதம்.
17-10-90 புதன் - தீபாவளி.


ஆத்மீக அன்பர்களுக்கு அரிய சந்தர்ப்பம்

| | | |
|---|---|---|
| கந்தனே கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் | — | 30-00 |
| ஈழத்துச் சித்தர்கள் | — | 18-00 |
| இந்தோநேசியாவில் இரண்டு வருடம் | — | 16-00 |
| நவராத்திரிப் பாமாலை | — | 10-00 |
| பதிவுப் பார்சல் மூலம் அனுப்பச் செலவு | — | 11-00 |

**நா. முத்தையா 'குருபவனம்', கண்டி வீதி, சாவகச்சேரி, என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்க.**

# NEEMIA

**FERTILISER**

## நீமியா உரம்

நெற்பயிர், வாழை, தோட்டப்பயிர்
செழித்து வளரவும்
சிறந்த விளைச்சலைத் தரவும்
அடி உரமாகப் பாவியுங்கள்

## நீமியா உரத்தினை

இது ஒரு சிறந்த பூச்சிக்கொல்லி கூட
இது ஒரு மில்க்வைற் தயாரிப்பு

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம் - யாழ்ப்பாணம்.

---

நீங்கள் நீண்டநேரம் தியானத்தில் இருந்து
இறைவனைப் பிரார்த்திப்பதற்கு உதவுவன

★ ஜெயந்தி பத்திகள்
★ அண்ணா ,,
★ துர்க்கா ,,
★ கோகுல் ,,

இறைவனை ஒளிமயமாகத் தரிசிப்பதற்கு
உகந்தது சிவன் மார்க் சூடங்கள்.

தயாரிப்பாளர்கள்:

**அண்ணா தொழிலகம்**
இணுவில்.

Registered at the G. P. O. as a Newspaper M.L. 59 / 300


# கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம்
( வரையறுக்கப்பட்டது )

## கரைச்சிப் பகுதியில்
## எமது சிறப்பான செயற்பாட்டில்

★ நுகர்ச்சிப் பொருட்கள்

★ எரி பொருட்கள்

★ புடைவை வகைகள்

★ கட்டடப் பொருட்கள்

★ பாடசாலை உபகரணங்கள்

★ உரம், கிருமி நாசினி வகைகள்

★ நெல் கொள்வனவு

ஆகிய சேவைகளும் மற்றும் பல சேவைகளும்
குறைவறக் கிடைக்கின்றது.

எமது சேவையின் நோக்கம் நுகர்ச்சியாளர்களின்
தேவையைப் பூர்த்தி செய்வதே யாகும்.

" கூட்டுறவே நாட்டுயர்வு "

கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம்
கிளிநொச்சி.


இப் பிரசுரம் கரைச்சி சைவ வித்தியா விருத்திச் சங்கத் தலைவர், திரு. க. துரைராசா அவர்களால், கிளிநொச்சி 7-ம் வாய்க்கால் " குருகுலம் " என்ற மூகவரியிலுள்ள சர்வசக்தி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.